# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்.

| மாலை 4 | ஞாயிறு 28-4-40 விக்ரம௵ சித்திரை௴ 16௳ | முத்து 4 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 98 |
| புத்தகத்தின் போக்கு ... ... ... ... | | 100 |
| நாம் பறித்த புஷ்பங்கள் ... ... ... ... | | 102 |
| அதிகப் பிரஸங்கம் ... ... ... ... | | 105 |
| புதிய திட்டப்படி இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகம் | பி. ஆர். விஸ்வநாதன், பி. ஏ. | 107 |
| இதுவே இன்பம் ... ... ... | "ராஜகுமாரி" | 109 |
| விடுதலை ... ... ... | ராஜலக்ஷ்மி ராகவன் | 110 |
| சிறுவர் பகுதி ... ... ... | பார்வதி | 112 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் ... ... | கா. சி. வேங்கடரமணி | 115 |
| சாந்த சக்குபாய் ... ... ... | "தாசு" | 116 |
| புத்தக விமர்சனம் ... ... ... ... | | 120 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# உலக வர்த்தமானம்

அண்டம் புரளுகிறது. உலகம் முழுவதுமே சென்ற ஆறு மாத காலமாக நடந்து வந்த ஐரோப்பிய யுத்தத்தின் புதிய போக்கைக் கண்டு பதை பதைக்கிறது. "சம்னர் வெல்ஸ் தூதோடு யுத்தம் நின்றுவிடும்; ஏப்ரலில் சமரஸம் நிலவும்" என்ற பேச்சுகள் எல்லாம் மாயமாக மறைந்து விட்டன. இப்பொழுதோவெனில், "இன்னும் எந்த நாடு ஐயா, ஹிட்லரின் மிருகத் தன்மைக்கு இரையாயிற்று?" என்று அன்றாடம் ஆவலுடன் கேட்கும் நிலைமையில் உலகம் இருக்கிறது.

பிரிட்டிஷ்—பிரெஞ்சு யுத்த சபைகள், பொருளாதார யுத்தத்தைத் தீவிரமாக நடத்தவேண்டும் என்று தீர்மானித்ததாலோ என்னவோ, ஹிட்லர் திடீரென்று முன் பின் பார்க்காமல் நார்வேமீது பாய்ந்தார். ஆனால் பிற்பாடு கிடைத்த செய்திகள் "ஹிட்லர் தன் திட்டப்படித்தான் அந்தந்த நாடுகளை எதிர்க்கிறார்," என்று கூறுகின்றன. அவருடைய திட்டம் எப்படியாயினும் நார்வே அவர் லக்ஷியமாயிற்று. ஸ்வீடன்பேரிலும் திடுதிப்பென்று பாய்ந்து விடுவார் என்று வரும் செய்திகள் கூறுகின்றன.

நார்வேமீது ஜெர்மன் படையெடுப்பு பிரிட்டிஷ் பிரெஞ்சு அரசியல் வட்டாரங்களில் மிகுந்த கலவரத்தை மூட்டிவிட்டது. நார்வே, ஜெர்மன் படையெடுப்பை எதிர்ப்பதில் பிரிட்டிஷ் பிரெஞ்சு துருப்புகள், மிகுந்த உதவி புரிகின்றன. இந்த யுத்தத்தில் ஜெர்மனிக்கு அபரிமிதமான நஷ்டம் என்று ராய்ட்டர் செய்திகள் கூறுகின்றன. நார்விக் துறைமுகத்தை பிரிட்டிஷ்காரர்கள் மீட்டுவிட்டார்கள் என்றும் செய்தி கூறுகிறது.

இதனிடையில் இத்தாலியும் தன் பலத்தைச் சற்று காண்பிக்க விரும்புகிறது போல் தெரிகிறது. "முஸ்ஸோலினியும் சண்டைக்குத் தயாராவார்?" என்று ராஜதந்திரிகள் சந்தேகிக்கிறார்கள்.

ரஷ்யோ—ஜெர்மன்—இத்தாலியோ ஒப்பந்தம் கூட ஒன்று ஆகப்போவதாகச் செய்தி கூறுகிறது. அவ்வொப்பந்தத்தின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் தென் கிழக்கு ஐரோப்பாவில் யுத்தம் பரவுமானால், இவ்வொப்பந்தக்காரர்கள் அவ்வித யுத்தத்தைத் தடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளப் போவதாகத் தெரிகிறது. இவ்வொப்பந்தத்தை முடித்து வைப்பதற்காக மறுபடியும் ஸோவியத் மந்திரி பெர்லின் சென்றிருந்தாராம்.

டப்கூபர் சென்ற வாரத்தில் வெகு ஆக்ரோஷத்துடன் ஜெர்மனியை எதிர்த்தார். "ஜெர்மனியை ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கவேண்டும். வேறு ஒன்றும் செய்வதில் பயனில்லை" என்று கூறினார்.

பிரிட்டிஷ் யுத்த பட்ஜெட்டை ஸர் ஜான் சைமன் முதல் தடவையாக சட்டசபையில் சமர்ப்பித்தார். 1940—41க்கு மதிப்பிடப்பட்ட மொத்த செலவு 2,667 மில்லியன் பௌன். இதில் 1234 பௌன்வரிகளிலிருந்து எதிர்பார்க்கிறார். இன்னும் தேவையான 1433 மில்லியன் பௌனுக்கு எவ்விதம் வருமானம் ஏற்படுத்துவது என்பதுபற்றி யோசிக்கிறார். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைவினால் பட்ஜெட்டைச் சரிக்கட்ட தனக்கு இஷ்டமில்லை என்று தெரிவித்தார்.

## உள் நாட்டில்

1935 வருஷத்திய இந்திய அரசியல் திட்டத்தின்படி இந்தியாவில் ஏழு மாகா

ணங்களில் மாகாண கவர்னரே அரசியல் செலுத்திவரும் நிலைமையை இன்னும் ஒரு வருஷ காலம் மாற்றாமல் பத்திரப்படுத்தி வைக்க காமன்ஸில் இந்தியா மந்திரி லார்டு ஸெட்லண்டு ஒரு பிரேரணை கொண்டு வந்தார். அப்பொழுது இந்தியாவின் தற்கால நிலைமையைப்பற்றி விவரமாக ஒரு சொற்பொழிவு ஆற்றினர்.

இந்தியாவின் நிலைமையை ஒழுங்கு படுத்த வேண்டிய சக்தி இந்தியரிடமே இருக்கிறது என்று கூறினர். இந்தியாவிலுள்ள பல சாராரும் ஒன்று சேர்ந்து இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபட்டார்களானல், இந்தியாவுக்குச் சுலபமாகச் சுதந்திரம் கிடைக்கும் என்று எடுத்துக் கூறினர்.

ஆனல் இந்திய பிரபல அரசியல் வாதிகள் ஸெட்லண்டின் காமன்ஸ் பிரசங்கத்தைக் கேட்டு, வருந்துகிறார்கள். இந்தியாவின் நிலைமையை ஸெட்லண்டு ஒரு விதத்திலும் ஒழுங்குபடுத்த வில்லை என்று காங்கிரஸ்காரர்களும், இன்னும் மற்ற அறிவாளர்களும் பிரிட்டன்மீது குறை கூறுகிறார்கள். ராஷ்டிரபதி ஆஸாத்தும் இதே அபிப்ராயத்தை வெளியிட்டார். அரசியல் நிர்ணய சபை ஒன்று கூட்டி, அதன் திட்டங்களைப் பிரிட்டன் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினர்.

### தமிழ் நாட்டில்

ஸெட்லண்டுக்குப் பதில் சென்னை மேயர் ஸத்திய மூர்த்தி ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் பிரிட்டன் இது போல் விளக்கெண்ணெய் பேரம் செய்து வந்தால், வருங் காலத்தில் பயங்கரமான நிகழ்ச்சிகளை பிரிட்டன் பார்க்க வேண்டியதாக இருக்கும் என்று கூறினர். அரசியல் நிலைமையை சீர்படுத்த முதன் முதலில் எல்லா இந்திய மாகாண பிரதம மந்திரிகளும் கூடிக் கலக்க வேண்டும் என்று ஓர் யோசனை கூறினர்.

சா. ஸந்தானம், கும்பகோணத்தில் தற்கால இந்திய நிலைமையைப் பற்றி பேசிய பொழுது, இந்தியாவுக்குத் தகுந்ததான ஓர் அரசியலமைப்புத் திட்டத்தை விவரித்துக் கூறினர். அவர் அபிப்பிராயப் படி ஒரு ஜனநாயக சர்க்கார் சரிவர நடக்க வேண்டுமானல் இந்திய அரசியலமைப்பை மூன்று பிரிவாகப் பிரிக்க வேண்டும். (1) ஸ்தல சுய ஆட்சி (ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து மூலமாக) (2) சமூக கலாசார சீர்திருத்தங்களையே நோக்கமாகக் கொண்ட மாகாண சர்க்கார் (3) தேசீய நோக்கத்துடன் காரியத்தைப் பார்க்கும் மத்திய சர்க்கார். இத்திட்டப்படி அரசியலை அமைத்தால் இந்தியாவில் ஜனநாயகம் ஒழுங்காக நடைபெறும், என்று கூறினர்.

---

## சர்க்காரின் கப்பல் வர்த்தகக் கொள்கை

இந்தியச் சரக்குகளின் ஏற்றுமதியைச் சர்க்கார் நிர்ணயிக்கும் முறை, பிரிட்டிஷ் கப்பல் வர்த்தக இலாகாவின் உத்திரவுப்படி இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட 'ஷிப்பிங் கன்ட்ரோலர்' மூலமாய் நடைபெறுகிறது. இதன்படி, நூற்றுக்கு எழுபது பங்கு கப்பல்கள் பிரிட்டிஷ் சர்க்கார் வாங்கும் சரக்குகளை ஏற்றிச்செல்லும். மீதி முப்பது சதவிகிதத்தில் 25 சதவிகிதம் பிரிட்டிஷ் வர்த்தகர்களுக் கேற்றுமதியாகும் பொருட்களுக்கும், மிகுந்த 5 சதவிகிதமே மற்ற சாமான்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனல் ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளுக்குக் கப்பல்கள் கிடைப்பதில்லை. சமீபகாலத்தில், இதனல் இந்திய ஏற்றுமதிப் புள்ளிகள் வெகுவான சீர்கேட்டைக் காட்டுகின்றன. யுத்தத்தினல் இந்திய சரக்குகளுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி யேற்பட்டிருந்தும், உலக விலைவாசிகள் உயர்ந்திருந்தும், நம் விவசாயப் பொருள்கள் அதிகமாய் ஏற்றுமதி யாகாததுடன், வெகு குறைந்த விலைக்கே சர்க்காரால் வாங்கப்படுகிறது. இப்படிச் செயற்கை முறையால் வியாபார மந்தத்தை நிலைநாட்டுவது மக்கள் பொருளாதார நிலையைப் பாதிப்பதாகும். ஏற்றுமதிக் குறைவும், விவசாயப் பொருள்கள் குவிந்து கிடப்பதும், அவைகள் விலை அதோகதியாய்க் குறைந்திருப்பதும் சர்க்கார் செயலின் பயனகும்.

—கல்கத்தா வர்த்தக சங்கம்

# யுத்தத்தின் போக்கு

(கா. சி. வேங்கடரமணி)

ஐரோப்பாவில் யுத்தம் காட்டுத் தீ போல் பரவி வருகிறது. மலைச் சரிவுகளில் தீப் பிடித்தால் எவ்விதம் பரவுமென்று வாயு பகவானால் கூட ஜோஸ்யம் சொல்ல முடியாது. மேல் நாட்டு யுத்தங்களும் அப்படியே.

இத்தீயை மனுஷ்ய யத்தனத்தால் அணைக்கவும் முடியாது. தானே எரிந்து எல்லாவற்றையும் நாசமாக்கி, கரியாக்கி, அழித்த பிறகுதான் தீ அணையும். சொக்கப்பானை வேடிக்கை நாம் பார்க்கலாம்.

யுத்தத் தீயும் அப்படியேதான். அதிலும் மேல்நாட்டு யுத்தம் வலுத்த காட்டுத் தீயைப் போல. எல்லையில்லாத கொள்ளையும் நாசமும். மேல் நாட்டு நாகரீகத்தின் மேன்மையான வாழ்வின் முக்கியமான குறை இதுவே—நல்ல மரத்திற்குப் புல்லுளி பாய்ந்தாற்போல்.

சென்ற மூன்று நூற்றாண்டுகளாக, இவ்வுலகிலுள்ள ஐந்து கண்டங்களிலும் வலுத்த போராட்டங்களும், மஹா பாரத யுத்தங்களும் ஐரோப்பாவில்தான் நடந்து வருகின்றன. கஷ்டப் பட்டு கொடிக் காலைப் பயிரிட்டு ஆட்டைவிட்டு அழிப்பதுபோல்!

வழி என்ன?

இந்த காட்டுத் தீயை எப்படி அணைக்கிறது? வழி உண்டா? இதற்கு "ஃபயர் இஞ்ஜின்" உண்டா? இஞ்சினிருந்தாலும் அதற்குத் தேவையான நீரும் வசதியும் அருகிலுண்டா? அல்லது எரிந்த வழியே பரவி எரிந்த பிறகுதான் தீ அழிந்து தானாகவே அணைய வேண்டியது தானா?

இதற்கு பதில், நமது முயற்சியிலும், மனோபாவத்திலும், கல்விச் சிறப்பிலும், நமது நாகரீகத்தில் நாம் பாராட்டும் அன்பையும், அளவையும் பொருத்து தான் இருக்கிறது. மேல் நாட்டில் யுத்தத் தீயை அணைக்க அவர்களுக்கு ஒரே ஒரு வழிதான் தெரியும். கட்டைகளை, கட்டுக் கட்டாய் மேல் கொண்டு அடுக்கி, தீயை அணைக்கப் பார்ப்பார்கள்—மூச்சு விட முடியாமல் தீ சாகட்டுமே என்று! அப்படி அணையுமா?

ஆகையால் தான் முப்பது வருஷத்திற்கு ஒருதரம் யுத்தம் ஐரோப்பாவில் ஏற்பட்டு மேல் நாட்டு நாகரீகத்தை சிதைத்து விடுகிறது. பீரங்கிக் குவியல்களால் சமாதானம் வருமா? ஜெயிலில் போடுவதால் கைதி சீர்திருத்தமாவானா? அப்படி சமாதானம் வந்தாலும் நீடித்து நிற்குமா? புலியின் நகத்தை வெட்டி 'பாலிஷ்' செய்தால் போதுமா? உற்பத்தியாகும் காமக் குரோதங்களுக்கு மூலகாரணங்களையல்லவோ தெரிந்துகொண்டு அடக்கி ஆளவேண்டும்.

இருந்தாலும் யுத்தங்களாலும் ஒரு பயன் உண்டு—காட்டுத் தீயும் பயனளிப்பதுபோல. மழை பெய்தவுடன் புதுப் புல் முளைத்து செழிக்க, காட்டுத் தீயின் உதவியை காடு தேடுவதுபோல, சோர்ந்து, கட்டையிட்டு நிற்கும் மானிட வாழ்விற்கு புத்துயிரளிக்க யுத்தமும் ஒரு உதவியாய் சில சமயங்களில் ஏற்படுகிறது. தூங்கி நிற்கும் தியாகத்தையும், பராக்ரமத்தையும் சமுதாய உத்ஸாகத்தையும் ஒற்றுமையையும் கிளப்பி வாழ்வை புதுப்பிக்கிறது.

ஆனால் அளவிற்கும், நோக்கத்திற்கும் மிஞ்சி யுத்தத்தைப் பரவவிட்டால் பின் வரும் சமாதான சட்ட திட்டங்கள் 'வார் ஸேல்ஸ்' உடன் படிக்கைபோல், விஷ வித்தாய்ப் போய்விடும். அடுப்பிலிடவேண்டிய தீயை கூரையிலிட்டாற்போல் ஆய்விடுமல்லவா. தற்கால அரசியல் நிலையில் இதைப் பாதுகாக்க வேண்டிய முக்கிய கடமை என் அபிப்ராயத்தில், இந்தியாவையும், அமெரிக்காவையும் சேர்ந்தது.

## இந்தியாவும் அமெரிக்காவும்

போர் நடக்கும்பொழுதே பின் வரும் சமாதானத்திற்கு வேண்டிய சட்ட திட்டங்களை முன்கூட்டி செய்துகொள்ளுவது நலம். நேசநாடுகள், யுத்தத்தின் தங்கள் நோக்கத்தை இன்னும் தெளிவாகச் சொல்லி, இந்தியாவின் 40 கோடி ஜனங்களின் ஆதரவையும், 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா'வின் 15 கோடி ஜனங்களின் ஆதரவையும், இவர்களின் கணக்கில்லாத பொருள் உதவியையும் அடையவேண்டும். இந்தத் துறையில் இந்தியாவும் அமெரிக்காவும் சேர்ந்து பாடுபட பலவித நியாயங்களும், வசதிகளும் இருக்கின்றன.

இதற்காக நேசநாட்டுத் தலைவர்களின் ஒரு கூட்டம் கூட்ட வேண்டியது அவசியம். நமக்கு சுயராஜ்யம் கிடைத்துவிட்டது, என்று எண்ணி அதிகாரத்தை கைவசப் படுத்தி நாம் நடந்துகொள்ள வேண்டும். மகாத்மா காந்தியும் பண்டித ஜவஹர்லால் நேருவும் கையொப்பமிட்டு, அன்னிய நேச நாடுகளுக்கு ஓர் அழைப்பு அளித்து சமாதானத்தில் ஊக்கமுள்ள எல்லாத் தலைவர்களையும், ஒன்று சேர்த்து சர்வ தேச சங்க மொன்றை நிலை நிறுத்த தைர்யமாய் பிரயத்தனம் எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்ளத்தை உபயோகப் படுத்த வேண்டுமென்றால், வெள்ளத்தின் நடுவில் நின்றுதான் அணை போட வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரியா யிருந்த காலஞ் சென்ற லார்ட் பீகன்ஸ் பீல்ட் (டிஸ்ரேலி) என்பவர் சொல்லியபடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஜீவதாது (Centre of gravity) லண்டனிலிருந்து டில்லிக்கு மாறிக்கொண்டு வருகிறது. ஆகையால் ஜன நாயகத்தை நிலை நிறுத்தவும் நூறு வருஷமாவது தாங்கி நிற்கக் கூடிய சாமாதானத்தைப் போற்ற வேண்டிய இயல்பும், மனோபாவமும், சக்தியும் சாந்தமும் தற்காலம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் தான் இருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் ஒன்று சேர்ந்து இந்தத் துறையில் பாடுபட்டால் தான் மிக்க பலன் உண்டு. க்ஷேமம் உண்டு. நவீன யுத்தத்தில், முடிவில் சமாதான திட்டத்தை, போர் புரிவோர் மாத்திரம் போட்டுப் பயனில்லை என்பதற்கு வர்ஸேல்ஸ் உடன்படிக்கையே அழியாசாக்ஷி. ஆகையால் சமாதானத்திலும், சாந்தத்திலும் எப்பொழுதும் ஊடுருவி நிற்கும் இந்தப் பாரத நாட்டின் உதவியும் தலைமையும் அன்னியில் இவ்வுலகில் சமாதான மேது? போர்க் களம்தான்.

## ஸர்வ ஜன சங்கம்

பத்திரிகைகளிலும், ராய்ட்டர் தந்திகளிலும் படிக்க இந்தியா பல பிளவுகள் பட்ட நாடு போல் தோன்றுகிறது. அது பத்திரிகை மாயம். ஆனால் உண்மையில் அழியாத ஒற்றுமை நமது நாட்டில் இருக்கிறது. யானையின் பலம் நமக்கு எவ்விதத்திலும் இருக்கிறது. ஆனால் அதையறிந்து விவேகத்துடன் நடக்க அறிவும் முயற்சியும் குறை. அதுவும் ஈசன் கிருபையால் மகாத்மாவின் தலைமையில் கொஞ்சம் கொஞ்சமாய் நமக்கு வந்துகொண்டிருக்கிறது. நமது தேசத்தில் காணும் வேற்றுமை அன்னிய அரசியல் கண்ணுக்குத்தான் ஏற்பட்ட ஸ்வய நலக் காட்சி.

ஜனப் ஜின்னாவின் முரசைக் கண்டு நாம் பயப்பட வேண்டாம். புலி வேஷம் தான். நமது நாட்டை ஒருவராலும் பிளக்க முடியாது.

மேல்நாட்டு நாகரீகத்திற்கு இந்த நெருக்கடியில் மேன்மையான வழிகாட்ட வேண்டிய கடமை இப்பொழுது நம்முடையது. ஆகையால் வரும் காலத்தை நாம் தீர்க்கதரிசிகளாய்ப் பார்த்தால் நமக்கு சுயராஜ்யம் மாத்திரமல்ல; உலகத்தை சாந்த வழியில் முன்னேற்றமடையும்படி செய்யவேண்டிய கடமையும் நமக்கே. ஆகையால் நமக்கு "சுயராஜ்யம் கிடைத்துவிட்டது, அது நமக்கு பிதுரார்ஜிதம்," என்ற மனோபாவத்தைக் கையாண்டு நாம் ஊக்கத்துடன் தொண்டு புரிய ஆரம்பித்தால்தான் நமது தொண்டு நமக்கும் பயன்; பிறருக்கும் லாபம்.

(104-ம் பக்கம் பார்க்க)

# நாம் பறித்த புஷ்பங்கள்

## ஸர். ஸி. ஓய். சிந்தாமணி

அதிகப் பகட்டானதும், மிக உயர்ந்தது மான சில குணுதிசயங்களிடையே, சிந்தாமணியிடமுள்ள ஓரிரு இனிய குணங்கள் கவனிக்கப்படுவதில்லை. அவரது சாந்தமான வெளித்தோற்றத்தையோ, ஆழ்ந்த அறிவுடைப் பேச்சையோ கொண்டு அவரை மதிப்பிடுவோர், அவரைத் தீர அறிந்தவராவர். வாழ்க்கைப் பளுவைக் குறைக்கும் வகையில் அதன் லேசான அம்சங்களையும் அனுபவிப்பதில் நிபுணர். காலையில் கடவுள் பூஜையில் இறங்கினுல், அதில் அரைகுறை வேலை கிடையாது. மந்திரத்திலோ, மற்ற சாமக்கிரியைகளிலோ, சிறிதும் குறைவதில்லை. காலையில் இப் பக்தி செய்பவர், மற்ற நேரங்களில் இன்ப அனுபவத்தைக் குறைப்பதில்லை. பூஜை, பசியாறல், உண்ட மயக்கத்தில் உறக்கம்—அதன் பின் 'லீடர்' பத்திரிகையாபீசில் கடுமையான, வேலை. ஆபீசிலுள்ள இரண்டு மூன்று மணி நேரத்தில், பலருக்கும் பேட்டியளித்தல், கடிதம் 'டிக்டேஷன்', பேபர் பார்த்தல், புரூஃப் பார்த்தும், மறுநாளைய தலையங்கம் வரைதலும்—இதெல்லாம் இடைவிடாத 'புகைத்தலு'க்கிடையே. பிறகு அநேகமாய் சினிமாவுக்கு. ஒவ்வொருநாளும் இதே நியதிதான். "காலையில் மதம், பிற்பகலில் வேலை, மாலையில் களியாட்டம்."

வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய முழு இன்பத்தையும்கிரகித்துக் கொள்ளுவதில் நிபுணர்; அதிலும், ஒவ்வொன்றிலும் சிறு சிறு அளவோடு விட்டுவிடுவதில்லை. புகையிலையை ஊதித் தள்ளுவதில் இணையற்றவர். சேர்ந்தாற்போல் ஒரே 'மார்க்' சிகரெட்டை ருசிப்பதுமில்லை. அவருடைய 'சிகரெட் கேஸி'ல் எத்தனை சிகரெட்டுக்களுண்டோ அத்தனை வகையுண்டு. அவர் நண்பர் ஸர். டெஜ்பகதூர் ஸப்ரூவைப் போல், சிகரெட்டிலிருந்து ஹுக்கா வரையிலுள்ள பல ரகங்களையும் சுவைப்பது மட்டும் இல்லை, நல்ல விகாரின் இனிய சுகத்தையும், அதைவிடச் சிறந்த ஹுக்காவின் உயரிய இன்பத்தையும் அவர் ரசிக்காமலிருப்பது அதிசயமேயாகும். ஒரே வகையில் திருப்தி பெருமல் ரகவாரியாக இன்பம் தருவதில் வல்லவராகிய இவர், லண்டனில் மூன்று மாதத்திற்குள் 80 ஹோட்டல்களை மாதிரி பார்த்துவிட்டாராம்!

"தி ட்வேன்ட்டியத் ஸென்சுரி"

## போத்தன் ஜோஸப்

பத்திரிகைத் தொழிலில் சாமர்த்தியத்துடன் எழுதுவதில் போத்தன் ஜோஸப் இந்தியாவில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறவர். இந்தியாவில் மாத்திரம் அல்ல, இங்கிலீஷ் பேசிவரும் ஐரோப்பிய நாடுகளிலும், அவரைத் தோற்கடிக்கும் எழுத்துத் திறமை வாய்ந்தவர்கள் இல்லவே இல்லை என்றே சொல்லலாம்.

* * *

இந்தியாவிலும் மற்றெந்த தேசத்திலும் அவரைப் போல் பல துறைகளிலும் பேர் போனவர்கள் மிகக் கொஞ்சம். ஒன்றுக்கொன்று முறணுன பல சக்திகளும் அவரிடத்தில் கலந்து ஒருமைப்பட்டு இருக்கின்றன. இது ஓர் அற்புதமான ஈசுவரப் படைப்புக்கு உதாரணமாகிறது. அவர் ஆவலுடன் விளையாட்டில் ஈடுபடுபவர்; சிறந்த கலைஞன்; குதிரைப் பந்தய விஷயங்களின் முறையை நன்கறிந்தவர்; ஓயாமல் சரித்திர புத்தகங்களைப் படித்தவர்; விஞ்ஞானியுங்கூட; இது போதாது போல், பல மத விஷயங்களிலும் கொஞ்சம் பிரவர்த்தகஞ் செய்பவர். அவருடைய யோசனை கட்டுக்கடங்காதது. அரசியல் படங்களுக்கு (Cartoons) யுக்தி கூறுவதில் நிகரற்றவர். இந்திய பத்திரிகைகளில் ஒரு அம்சமான அரசியல் படங்களுக்கு அவர் ஜனகன் என்றே சொல்லலாம்.

## ஸ்ரீ கே. சீனிவாசன்

ஸ்ரீ. ஸ்ரீனிவாஸன் எவரும் விரும்பத்தக்க குணம் வாய்ந்தவர். கஷ்ட திசையிலிருப்போருக்கு உதவி வழங்குவதில் வெகு உதார குணமுள்ளவர்கள். ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்த பின், அதைத் தீரத்துடன் கடைப்பிடித்து நடத்தியே தீரும் தன்மையர். தனது தேசபக்தியைப் பறைசாற்று விடினும், பொது ஜன நன்மைக்கும், தேசிய, காங்கிரஸ் நிதிகளுக்கும் நிரம்ப வழங்குவர். இத் தாராள மனப் பான்மையிலும், தொழில் முறையிலும்

எப்பொழுதும் ஏமாறாத கூரிய அறிவு வாய்ந்தவர்.

'ஹிந்து' பத்திரிகை பெரும் பெயருடனும், தொழில் முறையிற் சிறந்தும், மக்களிடையே மேன்மேலும் வளரும் ஆதரவைப் பெற்றும் வருகிறது. பலருக்கு 'ஹிந்து' வில்லாமல் அன்றாட வாழ்க்கை பூர்த்தியாவதில்லை. ஸ்ரீ. ஸ்ரீனிவாஸனின் கை, பத்திரிகையின் ஒவ்வொரு வெற்றியிலும் வெளிப்படுகிறது. பத்திரிகைத் தொழிலிலும், பொது வாழ்விலும் ஸ்ரீநிவாஸன் அவர்களுடைய ஸ்தானத்தைவிட அதிகமாய் விரும்பத்தக்க தொன்றுமில்லை.

## ஸ்ரீ. எஸ். சினிவாஸய்யங்கார்

ஹைகோர்ட்டில், தன் தலைமுறையில் முதல் ஸ்தானத்தைப் பெற்ற, இவர், நிதானமான தன்னம்பிக்கையுடன் நடந்து கொள்வார்... நியாயாதிபதிகளுக்கு ஜூனியர் வக்கீல்கள் காட்டும் மரியாதையை, பெரும் ஜட்ஜுகளும் இவருக்குக் காட்டுவர்...பிறர் கேசுகளில் தீர்ப்பளிக்கும் ஜட்ஜுகள், இவர் வாதாட வரும்போது, தாங்களே விசாரிக்கப் படுவதுபோல் எண்ணிக் கொள்வர் போலும்...

வக்கீல் வேலையில் இவர் காட்டும் தன்னடக்கம் எல்லாம், அரசியல் வாதி அய்யங்காரிடம் காணப்படுவதில்லை. இதில் ஒரே தடபுடலும், தீவிரமும், துருதுருப்பும்தான்; தான் நினைப்பதை அப்படியே வெளியிடுதல்; ஒரே உணர்ச்சி வெள்ளம்; எப்பொழுதும் பக்கத்தில் பலருடனிருத்தல். பெரும் பணக்காரரும் சட்ட விஷயமாய் வரின், வெகுநேரம் காத்திருக்க, அரசியல் வாதியான எவ் வேழையும் எளிதில் இவரைக் கண்டு வெகு நேரம் பேசிப் போவர்...பண விஷயத்தில் ஸ்ரீ. அய்யங்கார் ஒரு வேதாந்தியென்றே சொல்லலாம். வெளிக்கு வாழ்க்கைச் சுகங்களை விட்டு விடாத போதிலும், பண மோகத்திலிருந்து தன் மனதை விடுவித்துக் கொண்டுள்ளார். அதனால்தான் பலதிறப்பட்ட மனிதரோடும் பெருமிதமின்றிப் பழகக் கூடியவராயுள்ளார்.

தற்போதும் ஸ்ரீ. அய்யங்காரின் மூளைத் திறன் குறையாதுள்ளது. அவருடைய தேகக் கட்டோ எப்பொழுதும் போலுள்ளது. நற்காரியத்தில் தீவிர மனோதிடமும் எப்பொழுதும் போல் உண்டு. அவர் குணாதிசயங்களும் பழைய பெரு வெற்றிகளும் அவருக்கு அகில இந்திய அரசியலில் முன்னணியில் நின்று வேலை செய்யும் இடமளிப்பனவாம்.

## ராஜாஜி

காந்தீயத்தை ஒரு கலையாகப் பயின்று வெற்றி பெற்றவர் ஸி. ஆர்; வார்தா வட்டாரங்களில் அவர்பேச்சுக்கு அலாதி மதிப்புண்டு. இதெல்லாம் பல நாட்களாய்ச் சலியாது, ஓயாது, முக்கியமானவர் பலரிடையே பழகி, அவரது நன் மதிப்பைப் பெற்றதன் பலனாகும். நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பிரமுகர், பிரபலஸ்தர்களுடைய ஆதரவைப் பெற்றதனால் வரும் ஆதிக்கமாகிய அரசியல் யந்திரத்தைத் திரை மறைவிலிருந்து இயக்கும் சூத்திரதாரி நம் ராஜாஜி.......
இவரது வேலைத்திறம் ஒப்புயர்வற்றது; சிந்தனைத் தெளிவோ சீர் குலைக்க முடியாதது; தர்க்கத்திறமை உயர்ந்த ரகம்; எவ்விஷயத்தையும் அலசி ஆராயும் திறன் வெகு கூர்மையானது; கடும் வேலையில் களிப்படைபவர் போல் தெரிகிறது. பளிச்சென்று மின்னல் வெட்டுப்போன்ற சாதுரியப் பேச்சு; எதிராளியை மடக்கும் குத்தலான வாதம்; அவசியமான இடத்தில் தெளிவான பாஷை; வேண்டுமென்றே கையாளும் மழுப்பல் பேச்சு; இவையெல்லாம் இவர் எழுத்திலும்

ஈரோடு டி. முன்சீப் கோர்ட்டு
O. P. No. 27 of 40

பவானி தாலுக்கா ஓடத்துறை கிராமம் கஸ்பாவிலிருக்கும் சின்னக் கவுண்டன் பெண்ஜாதி காமாட்சி அம்மாள்—மனுதாரி

ஷை தாலுக்கா கவுந்தப்பாடி கிராமம் பூலுவப்பட்டியி லிருக்கும் கொளந்தாக் கவுண்டன் மகன் சின்னப்பக் கவுண்டன் 1, ஷையூர் கருப்பண்ண கவுண்டன் பெண்ஜாதி அம்மணி அம்மாள் 3, ஷை யூர் வீரப்பக் கவுண்டன் மகள் மைனர் பாப்பாள் கார்டியன் பாட்டன் நஞ்சப்பக் கவுண்டன் 4.
—1, 3, 4 எதிர் மனுதாரர்கள

ஷை மனுவில் மனுதாரி தன் புருஷன் இறந்துபோன சின்ன கவுண்டனுக்கு பூலுவப்பட்டி சின்னப்ப கவுண்டன் 4-7-39உயில் ரூபாய் 50-க்கு எழுதிக் கொடுத்திருக்கும் பாண்டு தொகையை வசூலிக்க வார்சு சர்ட்டிபிகேட் கோரியிருப்பதில் ஷை மனு 7-6-40உ வாய்தா ஏற்பட்டிருக்கும் சங்கதி இதன் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈரோடு, 20-4-40. } E. S. Ganapati Aiyar, மனுதாரி வக்கீல்.

பேச்சிலும் வெகுவாய் வெளிப்படுகின்றன. வாதத்தில் தீரரான இவர் ஒரு சட்ட சபை வீரராவர். தனக்குப் பிரியமானவரிடம் தனியன்பு காட்டி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதிலும் இணையற்றவர். ஆனால் இதற்கெல்லாம் காணிக்கை இவரிடம் அடக்கமும் பணிவுமாகும். எதிராளிகளை அதோகதியாக்குவதில் எம்முறையும் கையாள்வாராகையால் இது மிகவும் பயப்படவேண்டிய விஷயம். இவரது பக்தர்களுக்கு இவரொரு தெய்வம் போல்வர்; ஆனால் பிறருக்கோ அப்படியில்லை. அருகிலிருக்கும் பலரிடையுள்ளதுபோலன்றி, வெகு தூரத்திலுள்ளவரிடை இவரது ஆதிக்கம் வெகு அதிகம்.

## பட்டாபி ஸீதாராமய்யா

பட்டாபி தன் பிறந்த ஊரான மசூலிப்பட்டணத்தையே தன் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார். பெருத்த வருமானமுள்ள டாக்டராக இருந்தும், தன் வாழ்க்கையைச் சுகமாக நடத்தப் போதிய வளவு செல்வம் பெற்றதும், தன் வைத்தியத் தொழிலை நிறுத்தி விட்டார். அன்று முதல் இன்றுவரையில் அவ்வப்பொழுது பல பணம் பெருகும் வியாபாரங்களைச் செய்ய முன் வந்திருக்கிறார். ஆனால் அவருக்குப் பணம் சம்பாதிப்பது என்பது பக்கத் தொழிலே தவிர, அவருடைய நோக்கம் அல்ல. வியாபாரத் துறைகளில் அவர் புகுந்து வேலை செய்ததைக் கடைசி வரையில் கொண்டுவந்திருந்தாரானால், ஆந்திர தேசத்தின் வியாபாரத்தையும், தொழிலையும் பெருக்கியே இருப்பார். ஆனால் தன் வாழ்நாள் முழுவதையும் அவர் கௌரவ உத்தியோகங்களிலும், பொதுஜன சேவையிலுமே கழித்தார்.......பொதுவாழ்க்கையில் பிரபலமாவதற்கு, வேண்டிய குணங்கள் எல்லாம் அவரிடம் இருக்கின்றன. அவர் ஓய்ச்சல் ஒழிவற்று எழுதுகிறவர். அந்தந்த கால நிலைமைக்குச் சம்பந்தப்பட்ட கட்டுரை ஒன்று எழுதுவதாக இருந்தால், அக்கட்டுரை ஒரு கட்டுரை நீளத்துக்குள் அடங்காது. இரண்டு அல்லது மூன்று கட்டுரைகள் நீளத்துக்குத் தொடரும். தைல தாரையாகப் பேசும் திறமை யுள்ளவர். எப்பொழுதுமே அவர் ஜாக்கிரதையுடன் இருப்பவர்.

'ஆன்வேர்டு' பத்திரிகையில் 'சித்திரலேகா'

## எம். எஸ். சுப்புலக்ஷ்மி

"எம். எஸ்"—அப்படித்தான் அவளுடைய பெயர் வழங்கி வருகிறது—சிறு பிராயத்திலிருந்தே கண்ணியமான காத்திரமுடையவளாக விளங்குகிறாள். அவள் சிறிய பெண்ணாக இருக்கும்போது நான் அவளைப் பார்த்ததில், அவளிடத்தில் கேவலம் அழகிய பெண்மைத்தனம் மாத்திரம் அல்லாமல், புஷ்பித்திருக்கும் நுண் அறிவின் வாசனையும் இருப்பதையும் நான் கண்டேன். கருவிழியுடன் அவள் ஓர் திடசித்தமுள்ள மௌனியாக விளங்கினாள். அவள் தேஜஸ் நிறைந்த முகத்தில் புன்னகை பூத்து நின்றது.........

...16 வயதிற்குள்ளேயே அவள் ஒரு முதன்மைபெற்ற பாடகராக ஆனாள். இந்தியாவிலும், ஸிலோனிலுமுள்ள ஸங்கீத சபைகளால் கச்சேரிகளுக்கு அழைக்கப் பட்டவர்களுள் "எம். எஸ்" வயதில் சிறியவள்.......கொடுமுடி சுந்தராம்பாளுக்கு அடுத்தபடியாகப் பிரிபிரியாக ஜனங்களைத் தன் கச்சேரிக்கு இழுப்பதில் "எம். எஸ்." சக்திவாய்த்த ஸ்திரீ பாடகர் ஆனாள். "கோகில கான" என்கிற பட்டம் "எம். எஸ்."க்குத் தகுந்ததுதான்.... சுப்புலக்ஷ்மியின் கலையில் அவளுடைய யௌவனத்தின் சக்தியும், ஆத்மாவின் குணமும் கலந்திருக்கின்றன. அவள் குரல் மலை ஊரவின் ஓட்டம்போல் இருக்கிறது. வீணையின் நாதம்போல் அவ்வளவு சுத்தமானது.

"திருவேணி"யில் ஜி. வேங்கடாசலம்

---

(101-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வஜன சங்கத்தைக் கூட்ட நமது நாடுதான் உண்மையில் தகுந்த புண்ணிய பூமி. அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களைப் போட்டு மஹாத்மாவின் தலைமையின்கீழ் உலகில் அரசியலில் தீர்க்கதரிசியாய் இருப்பவர்கள் எல்லோரையும் சீக்கிரத்தில் ஒன்று சேர்க்க வேண்டும். ஐரோப்பாவில் யுத்தம் நடக்கிறதே இந்தக் கூட்டத்திற்கு இப்பொழுது என்ன வேலையென்று தீர்க்கதரிசியாய் இருப்பவர்கள் ஒருநாளும் எண்ணமாட்டார்கள். போரின் முடிவு சமாதானம்தானே? வாழ்வின் முடிவு சாந்தம் தானே! இதுதான் உண்மை வெற்றி.

---

# அதிகப் பிரஸங்கம்

★ "சென்னையில் தண்ணீர் வெள்ளம்" ★

எங்குபார்த்தாலும் தண்ணீர் பெருக்கு. "ஸர்வம் ஜலமயம் சென்னை" யாக இருந்தது. பூண்டியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரச்செய்யும் ஏற்பாடுகளை உடனே நிறுத்தும்படி பூஜ்யமேயர் அவஸரச் செய்தி அனுப்பினர். இனிமேல் சென்னையில் ஜலக்கஷ்டமே கிடையாது என்ற தைரியத்தினல் தான் இவ்விதம் அவர் செய்தார். இது புது வருஷத்தின் மஹிமையா என்று சந்தேகப்படவேண்டாம். சென்னைக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைக்கக்காரணமாக இருப்பது "அதிகப் பிரஸங்கி வடித்த முதலைக்கண்ணீரே." மனிதர் கண்ணீர் போல் முதலைக்கண்ணீரும் உப்புக்கறிக்குமா என்று எனக்குத் தெரியாது. இச்சந்தேகத்தை, மாயக்கூத்தரிடம் கேட்டுத்தான் தெளியவைத்துக் கொள்ளவேண்டும்.

அடிச்சாரையா பிரைஸ், யார் தெரியுமா? நம் மாயக்கூத்தர்தான். வேறு ஒருவருமில்லை. எதற்காகப் பிரைஸ்? அதிகப் பிரசங்கி முதலைக்கண்ணீர் விடுத்ததைக் கண்டுபிடித்ததற்கா இல்லவே இல்லை. நெல்லுக்குள் அரிசி இருக்கிறதென்று கண்டுபிடித்ததற்கா? இல்லவே இல்லை. அரிசி இல்லாத பதர்களும் உண்டு என்பது அவருக்குத் தெரியாதா? அவர் கண்டுபிடித்தது அற்பசொற்பமா! ஏப்பை சாப்பையா! சாமான்யமா! நோபில் பிரைஸ் பெற லாயக்கானதல்லவா அது? சரி நானே சொல்லிவிடுகிறேன். அவர் கண்டுபிடித்தது என்ன வென்றால் "அதிகப் பிரஸங்கி செய்வது அதிகப் பிரசங்கம்" என்ற பெரும் தத்துவந்தான். அதிகப் பிரசங்கம் செய்வதுதானே, "அதிகப் பிரசங்கம்" என்ற தலைப்பையும் "அதிகப் பிரசங்கி" என்ற கையெழுத்தையும் படித்தபிறகு இப்பெரிய உண்மையைக் கண்டு பிடித்ததற்கு "நோபில் பிரைஸ்" கிடைக்காவிட்டாலும் இம்மாதிரி பெரும் விஷயங்களைக் கண்டு பிடித்தவருக்கு, எங்கள் சங்கம் கொடுக்கும் "காதறுந்த ஊசி" மாயக்கூத்தருக்கு நிச்சயமாகக் கிடைக்கும்.

"கவிகளின் கற்பனை விசித்திரங்களைக் கண்டு மகிழ்ந்து, தான் கண்டபடியே பிறருக்கும் காட்டி இன்புற வேண்டும்" என்ற அவாவால், "கம்பராமாயணத்திலே ஸ்ரீராமருக்கும் சூர்ப்பணகைக்கும் தர்க்கம் நடக்கிறது" என்றதற்கு "தற்கால நாடக மேடைகளிலே போல" என்றும், இந்த "நாடக மேடைகளிலேபோல" என்ற அடை மொழிகளைக் கொடுத்து மாயக்கூத்தர் எழுதினராம். "கம்பரது பாடல்கள் அவ்வாறு இருப்பதை அறிந்து அவர் இன்புற்றதே" இதற்குக் காரணமாம். அப்படியானல், "தர்க்கம் நடக்கிறது" என்றோ, அல்லது "நாடகங்களிலே போலத்தர்க்கம் நடக்கிறது" என்றோ எழுதியிருக்கலாமே. அதை விட்டுவிட்டு, "நாடக மேடைகளிலே போல." என்றும், இந்த நாடகமேடை சாதாரணமானதல்ல என்று தெளிவாய்க் காட்ட "தற்கால நாடக மேடைகளிலேபோல" என்றும் அனுவசியமாக ஏன் எழுதவேண்டும் என்றே நான் ஆக்ஷேபித்தேன்.

"தற்கால நாடகமேடை நிகழ்ச்சிகளை" ப்பற்றிப் பொது ஜன அபிப்ராயம் என்னவென்பதை, "பல்லாண்டுகளாகப் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதும் மாயக்கூத்தர்," பல பத்திரிகையின் மூலம் அறிந்திருக்கலாம். ஆனல் நாடகம் எழுதுவது அதை விமர்சனம் செய்வது, அதைப் பற்றி அபிப்ராயங் கொடுப்பது முதலியவைகள் தன் தொழில் அல்ல என்று அவர் கூறிக்கொள்வதால், பத்திரிகைகளில் வெளியாகும் நாடக விஷயங்களை அவர் படிக்காது விட்டிருக்கலாம். இதனல் அவருக்குத் தற்கால நாடக மேடையின் நிலைமை தெரியாததென்று ஆகிறது. போதாதற்குத் "தற்கால நாடகமேடை நிகழ்ச்சிகளை, இழிவாகவும் ஆபாசமாக

வும் கருதுவதற்கு நான் யார்" என்று மாயக் கூத்தர் கேட்கிறார். "தான் கண்டபடி பிறருக்கும் காட்டி இன்புறவேண்டும் என்ற அவா" மிகுதியால், ஒன்றும் கருதாது, அவர் இவ்விதம் எழுதினார் என்று அர்த்தமாகிறது.

கம்பனையும் வால்மீகியையும் சீர் தூக்கி, மாயக்கூத்தர் வெளிப்படையாக ஒன்றும் அவர் கட்டுரையில் கூறாவிட்டாலும், "தற்கால நாடகமேடைகளிலே போல" என்று கம்பராமாயணத்திற்கு அவர் கொடுத்த அடைமொழிகள் அநேக விஷம வியாக்யானங்கள்—அதிகப் பிரசங்கியின் அதிகப் பிரஸங்கங்கள் போல—செய்ய இடங்கொடுக்கும். ஆகையால் இந்த அடைமொழிகளைக் கொடுத்திருக்க வேண்டாம் என்று, அவைகளை ஆக்ஷேபித்தே அதிகப் பிரசங்கம் நடந்தது. இந்த அடைமொழிகள் இல்லாதிருந்தால், அதிகப் பிரசங்கியின் "அதிகப் பிரசங்கம், முதலைக் கண்ணீர்" முதலியவை ஏற்பட்டிருக்காது. ஆனால் சென்னையில் ஜலக் கஷ்டம் நிச்சயமாக ஏற்பட்டிருக்கும்.

சூர்பனகையையும், அவள் ராமன் மீது கொண்ட காதலையும்பற்றி, யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், இந்தக் கட்டத்தை, வால்மீகி கம்பன் இருவரின் காவ்யங்களிலிருந்து, ஒருவருக்கும் பக்கபலமாக இல்லாமல், காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல், சரியான சமயம் பார்த்துத் "தான் கண்டதை பிறருக்கும் காட்டி இன்புற" மாயக்கூத்தர் எழுதினார் என்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பக்க பலமாக அன்றோ ஆகிவிடும்?

இது இவ்விதமிருக்க, அசகாய சூரனை ராமாயண ராமச்சந்திரனுக்குத் தற்கால ராமச்சந்திரரை, மாயக்கூத்தர் இணையாக்கி அந்த ராமச்சந்திரனுக்குப்போல் இந்த ராமச்சந்திரருக்கும் "பக்கபலமே தேவையில்லை" என்று அதிகப் பிரசங்கிக்கு மாயக்கூத்தர் கூறுகிறார். அந்த ராமச்சந்திரனுக்கு உதவியாக, தேவர்கள் யாவரும், ஜாம்பவான், ஜடாயு, ஹனுமான், சுக்ரீவன், அங்கதன் முதலியவர்களாய் பூமியில் அவதரித்தார்கள் என்று ராமாயணங்களெல்லாம் கூறும்பொழுது, அந்த ராமச்சந்திரன் போன்றவர் என்று மாயக் கூத்தர் கூறும் இந்த ராமச்சந்திரருக்குப் பக்கபலமே தேவையில்லை என்று மாயக் கூத்தர் கூறுவது தவறு. ஏனென்றால், "அந்த ராமச்சந்திரன்போல் இந்த ராமச்சந்திரர்" என்றால், அவர்போல் இவருக்கும் உதவி அவசியம் வேண்டியிருக்கும். "அந்த ராமச்சந்திரனைவிட இந்த ராமச்சந்திரர் உயர்ந்தவர்" என்றால்தான் இந்த ராமச்சந்திரருக்குப் பக்கபலமே வேண்டியிருக்காது.

"சூர்ப்பணகையை"ப் பதிப்பித்த பொழுது இந்த ராமச்சந்திரர் என்ன கருதினார் என்பது அந்த ராமச்சந்திரனுக்குத்தான் வெளிச்சம். பொன் மான் மீது ஆசைகொண்ட சீதையின் பேச்சைக் கேட்டு அம்மானைத் துரத்திச் சென்ற அந்த ராமச்சந்திரன் போலவே, இந்த ராமச்சந்திரரும் "சூர்ப்பணகை"யைப் பதிப்பித்திருக்கலாமல்லவா?

"அதிகப் பிரஸங்கி"


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கம்பன் கவிதை | 1 | 8 | 0 |
| 2. | வாழ்க்கையே வாழ்க்கை (எஸ். வி. வி.) | 0 | 12 | 0 |
| 3. | கரட்டூர் ராமு (சீதா ராமைய்யர்) | 1 | 0 | 0 |
| 4. | புதுமைப் பித்தன் கதைகள் | 2 | 0 | 0 |
| 5. | சந்தனக்காவடி (கி.ஜ.ர.) | 0 | 8 | 0 |
| 6. | விஷ விருக்ஷம் (கி. நா. குமாரஸாமி) | 2 | 0 | 0 |
| 7. | துர்கேச நந்தினி (கு. ப. ரா.) | 1 | 4 | 0 |
| 8. | கணையாழியின் கனவு (கல்கி) | 2 | 0 | 0 |
| 9. | தேவதாஸ் (அ. கி. ஜயராமன்) | 0 | 12 | 0 |
| 10. | மங்கையர்க்கரசியின் காதல் (வ. வே. சு. அய்யர்) | 1 | 0 | 0 |

**ஸ்வேதாரண்ய ஆச்ரம புத்தகசாலை,**
295, லிங்க செட்டித் தெரு,
சென்னை.

# புது சட்டப்படி இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகம்

(பி. ஆர். விஸ்வநாதன், பி. ஏ.)

தற்போது அமுலுக்கு வந்துள்ள புது சட்டத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டு. இன்ஷ்யூரன்ஸ் சூபரின்டெண்டுக்கு அளித்துள்ள, பழைய மதிப்பிடும் முறையை மாற்றக் கூடிய, அதிகாரம்; கமிஷனைக் குறைக்கும் ஷரத்து. இவ்விரண்டு அம்சங்களையும் உண்மை அறிவுடன் நடை முறைக்குக் கொணர்ந்தால், கம்பெனிகளின் செலவு விகிதம் வெகுவாகக் குறையும்.

மதிப்பிடுவதில் சூபரின்டெண்டுக்குள்ள அதிகாரம், கம்பெனியின் செலவு விகிதத்தை எப்படிப் பாதிக்கு மென்று பலருக்குப் படாம லிருக்கலாம். ஆனால் இது வரை எவ்வளவு லேசான அடிப்படைகளைக் கொண்டு இம் மதிப்பிடும் முறை கையாண்டு வரப்பட்டுள்ளதென்பதையும், இத்தவறான மதிப்பின் பேரில் அமிதமான போனஸ்கள் வழங்கப்பட்டுள்ள தென்பதையும் நோக்கினால் இது எளிதில் தென்படும். பிரத்தியேகப் பயிர்ச்சி பெற்ற கணக்காளர்களால் பார்வை யிடப்பட்டால், மதிப்பு முறைக் கையிருப்புகள் கெட்டிப் படும். பெரும் கம்பெனிகளும், முன்போல் செலவிட்டு வருமாயின், சூபரின்டெண்டு ஆபீசுக்குத் திருப்தி யளிக்கும் அளவுக்கு 'மதிப்பு முறைக் கையிருப்புகளை'க் காட்ட முடியாதென்று கணக்கிடப் படுகிறது. பல கம்பெனிகள் 'காலாந்தரக் கட்டணத்தை' (Premium) அதிகரிப்பதனால் இதைத் தவிர்க்கலாமென்று எண்ணுவதாய்த் தெரிகிறது. வருங்காலக் கட்டண உயர்வு எப்படித் தற்போதைய நிலைமையை மாற்ற முடியுமென்று நமக்கு எட்டவில்லை. இக்கட்டண உயர்வின் அளவுக்கு போனஸ்களும் அதிகரிக்கவேண்டி வரின், இக்கம்பெனிகளுக்குப் புதுப்புதுக் கஷ்டங்கள்தான் உண்டாகும். இவ்விதத் தனி போனஸ் விகிதங்கள் இல்லாவிடினும், பழைய அளவிலேயே செலவு நடந்து வருமாயின், கட்டண உயர்வினால் லாப மிராது. எப்படியெனில், அடுத்தபடி 'மதிப்பிடும் காலம்' வருவதற்குள்ளான இரண்டு மூன்று ஆண்டுகளில் காட்டவேண்டிய அதிகக் கையிருப்புக்குக் கட்டண உயர்வு மட்டும் போதாது. இம்மிகுதிப் பணத்தைச் சேகரிக்க ஒரே வழிதான் உண்டு; இது வரை அநேக கம்பெனிகளின் அமித 'செலவு விகித'த்திற்குக் காரணமாயிருந்து வரும் செலவில் மிச்சம் பிடிப்பதேயாகும். இச்செலவு, பாலிஸிதார்களைச் சேர்க்கும் முறையில்தான் அதிகமாயிருந்து வருகிறது.

இப்படியாக, புதிய சட்டத்தின் 22-ம் பிரிவின்படி செலவுக் குறைவு அவசியமாகிறது; 40-ம் பிரிவு அதற்கு வழியையும் காட்டுகிறது. ஏஜென்டுகளுக்கான கமிஷன், முதல் வருஷத்திய கட்டணத்தில் 40 சத விகிதத்திற்குள்ளானதாக இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை மீறாது அனுஷ்டித்து வரின் செலவில் வெகுவான குறைவுண்டாகும். துரதிருஷ்டவசமாக, இந்த பிரிவின் வாசகம் திருப்திகரமாயில்லை. இதை மீறுவது எளிதாகக் காணப்படுகிறது. எனவே, பல கம்பெனிகளும் இந்த பிரிவிலிருந்து நழுவித் தம்மிஷ்டப்படி நடப்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் 70 சத விகிதம் கமிஷன் பெற்று வேலை செய்யக் கூடிய சீஃப் ஏஜென்டுகள் தேவையென்று ஒரு பிரபல மதராஸ் தினசரியில் விளம்பரம் வந்துள்ளதை எவரும் கவனித்திருக்கலாம். இத் தருணத்தைக் கைவிடாமல் குறைந்த கமிஷனில் தம் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளாவிடில், இந்திய லைஃப் ஆபீசுகள் முன்னேற்றம் தடைப்படுவது திண்ணம்.

பெருத்த செலவில் புது 'பிஸினெஸ்' சேகரித்துக் கொள்வதிலும் லாபமில்லையென்பதை இந்திய இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகி எவரும் அறிவர். இத்தகைய பிஸினெஸில் பெரும்பாலானவை அரைகுறையில் நின்று விடுவனவாம். இதனால் லாப

மடைபவர் வைத்திய பரிசோதகரும், சில சமயங்களில் ஏஜென்டுகளுமே யாவர்.

இப்படி இருந்தும், பெருந் தொகைகளிலுள்ள மோகமே, இக் கம்பெனிகள் குறிப்பிட்ட ஷரத்தை மீறுவதற்குக் காரணமாகும். அமிதச் செலவில் நடக்கும் பெரும் தொழிலினால், போனஸ்கள் குறைவுபடுமென்பதும், கம்பெனியின் சீர் கெடுமென்பதும், சிறிது சிறிதாக உணரப்படுகிறது. இன்ஷ்யூரன்ஸ் . நிர்வாகிகள் இதை யறிந்தால்தான் மேற்படி ஷரத்து உண்மையில் அனுஷ்டிக்கப்படும்.

மானேஜ்மெண்ட் செலவு, புது பிஸினெஸ், இவைகளைப்பற்றி இன்னுமொரு முக்கிய விஷயம் வெளிப்படையாகக் கூறப்பட வேண்டியதாகும். ஒரு கம்பெனியின் மூலாதாரப் பொருளைப் பாதிக்காமல் அதிகரிக்கக் கூடிய புது பிஸினெஸுக்கும் ஓர் அளவுண்டு. அநேகமாக எல்லா ஆபீஸ்களிலும் புது பிஸினெஸ் சேகரிப்பதில், முதல் வருஷத்திய கட்டணத்தின் அளவுக்கு மேல் செலவிடப்படுகிறது. இவ் அதிகச்செலவுக்கு, இதரக்கட்டண வருவாயிலிருந்தே எடுக்கவேண்டும். வழக்கமாய் வரும் கட்டணத்திலிருந்து ஒரு ஆபீஸ் செலவிடக்கூடியது, அதன் அளவையும், மதிப்பிடும் முறையையும் பொறுத்தது. உதாரணமாக, காலாந்தரக் கட்டணத்தில் 15 சதவிகிதம் செலவிடக் கூடுமானால், அதில் 12½ சதவிகிதம் தொழில் அளவினால் பாதிக்கப்படாத ஆபீஸ் செலவாகுமானால், மீதி 2½ சதவிகிதமே, புது பிஸிநெஸ் சேகரிக்க உபயோகிக்கப்படலாம். புது பிஸினெஸ் சேர்க்கும் வகையில், முதல் வருஷக் கட்டணத்தை விடவும், காலாந்தரக் கட்டணத்தில் 2½ சதவிகிதத்திற்கு அதிகமாயும் செலவானால், ஆபீசிற்கு வேறு லாபமின்றிப் போகுமாயின், கம்பெனி வெகு வேகமாய் சீர்குலையத் தான் செய்யும்.

முதல் வருஷத்திய செலவும், புது பிஸிநெஸுக்கான செலவும், முதல் வருஷக் கட்டண வருவாய்க்குக் குறைவாயிருந்தாலன்றி, அதிகமான புது பிஸிநெஸ் சேகரிப்பதனால் ஆபீஸ் முன்னேறுவதாய்க் கூறமுடியாது

நேர்த்தியான
: கலர் :
பிரிண்டிங்குக்கு
●
ரவி பிரிண்டர்ஸ்
●
156, பிராட்வே,
Post Box No. 248.
மதராஸ்.

Books by K. S. Venkataramani

| | | |
|---|---|---|
| 1. Jatadharan & other stories | 1 | 8 |
| 2. Paper boats | 1 | 0 |
| 3. Kandan, the Patriot | 2 | 0 |
| 4. Cat-guts, by Manjeri S. Iswaran | 0 | 12 |
| 5. Love of Dust, by Shankar Ram | 3 | 0 |
| 6. India's Road to Socialism by K. Santanam M.L.A. (Cen.) | 1 | 0 |
| 7. Three men of Destiny, by A. S. P. Iyer | 3 | 0 |
| 8. Soap Bubbles by S.V.V. I.C.S. | 1 | 0 |
| 9. Much daughtered by S. V. V. | 1 | 0 |
| 10. A Holiday Trip by S.V.V. | 1 | 0 |

**Svetaranya Ashrama Book Shop,**
295, Linghi Chetti Street,
G. T. MADRAS.

# இதுவே இன்பம்

"ராஜகுமாரி"

பிரிவாற்ருமையின் ஏக்கம்
என் உள்ளத்தில் வந்து எதிரொலித்தது.

கோடையும், கொஞ்சும் குளிரும்,
இளவேனிலும் எஞ்சிய ருதுக்களும் எதிராவதேன்?

அமர நினைவூட்டிய அந்த ஒவ்வொரு இவரையும் எண்ணி
அங்கலாய்ப் பானேன்?

நம் இரு ஹிருதயங்களின் இன்பப் பிடிப்பிலே
நம் எண்ணமெலாம் ஒன்ருகி
'நான் நீ' அற்றுப்போன நிலையிலே

எல்லாம் ஒரே சுகமயம் தானே?
அம்மணம் பூத்த மகிழ்ச்சிக்கு அப்பால்
இவ்விதப் பிரிவில் அல்லவா அது அகண்டமாகிறது.

இடையில் திரை விரித்த இப்பிரிவில்
இன்னும் எவ்வளவோ இன்பம் காணுது
'பிரிவாற்ருமை' எனப் பெயரிட்டுப் பொருமுவதேன்?

# விடுதலை

(ராஜலக்ஷ்மி ராகவன், பம்பாய்)

அவள் . பிறந்தவுடனேயே எனக்கும் அவளுக்கும் கலியாணம் செய்வதென்று என்தாயும் என் தாய் மாமனின் மனைவியும், அவருடைய மாமியார் முதலியோரும் தீர்மானித்தனர். எனக்கு அப்பொழுது வயது ஐந்திருக்கும். ஏதோ கனவு போலிருக்கிறது.

அவளுடைய குழந்தை முகம் இன்னும் என் கண்முன்னல் நாட்டியமாடுகிறது. அவளுடைய அழகிய முகத்தில் கூர்மையான மூக்கும், நீண்ட கண்களும், சிறிய வாயும் அழகுக்கு அழகு செய்வது போலிருந்தது. குழந்தை முகத்தை திருஷ்டி தோஷத்திலிருந்து காப்பாற்றுவதற்கோ என்னமோ மயிர் குச்சுகள் முகத்தை மறைத்துக் கொண்டிருக்கும். இவைகளை நான் எப்பொழுதுங்கூடவேயிருந்து அனுபவித்தவனல்லன்.

என் தகப்பனர் நல்லஸ்திதியிலிருந்ததால் என் தாயின் பிரஸவ காலத்தை முன்னிட்டுக்கூட நான் பாட்டிவீட்டிற்குச் சென்றவனல்லன். என் பாட்டியோ, பாட்டிக்குத் தங்கையோ வருவார்கள்; சிலநாளிருந்துவிட்டுப்போய் விடுவார்கள். ஆகையினல் அவளுடையபாலலீலைகளையும் கிள்ளைமொழியையும் கேட்கக் கொடுத்துவைக்காதவனய் விட்டேன்.

## 2

இளம் பிராயம் எப்பொழுதுஞ் சிந்திப்பதல்ல. பலவித எண்ணங்கள் கடல் அலை போல் எழும்பி மறைந்து முட்டிமோதிக் கொண்டேயிருக்கும் மனதில். சில வயதானவுடன் எவ்வெவ்வித யோசனைகள் நம்மை அதன் வசம் செய்துகொண்டு, குரங்காட்டிகைக் குரங்குபோல் ஆட்டிவைக்கிறதோ அந்த மாதிரியல்ல, அந்த ஆனந்த மயமான இளம்பிராயம். அதுவும் உயர்ந்த ஸ்தியிலிருக்கும் தந்தையின் மகனன என்னைப்போன்றவர்களுக்குக் கொஞ்சங்கூட கவலையிராது. "உலகம் எந்த மாதிரி இருக்கிறது, எல்லோரும் நம்மைப்போலிருக்கிருர்களா, அல்லது, கஷ்டப்படுவார்களும் உண்டா?" இவைகளை யோசிக்கக்கூட எனக்குப் போதிய நேரங் கிடையாது.

நான் எம். ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் சிறுவயதில் நடந்த விவாகப் பேச்சு மீண்டும் ஆரம்பமாயிற்று. என் மனதைக் கவர்ந்த கட்டழகியும் நல்ல படிப்பும் பாட்டும் கற்றுக்கொண்டு நாகரீக மங்கையாய் விளங்கினள். அவளைப் பார்த்த எவனும் அவளை மணக்க எக்காரியமும் செய்யத் துணிவான். உலகின் எழிலெல்லாம் திரண்டு ஒருருவாய் அமைந்திருந்தது. அவளையும் என்னையும் எல்லோரும் நல்ல ஜோடி என்பார்கள். ஆனல்... ...ஆனல், பிரும்மதேவரின் ஆணை வேறு விதமாயிருப்பதை யார் அறிவார்?

## 3

என் மாமா எந்த அந்தஸ்தில் அவருடைய உத்யோகத்தை ஆரம்பித்தாரோ அதே நிலையில்—தான்மேலே போனல் ஒருவேளை ஆரம்பித்த அந்தஸ்துக்குத் தன்னைவிட்டுப் போய்விட்டானேயென்கிற ஏக்கமும், தன்னை மதி கெட்ட மனிதன், ஸ்திரமில்லாத மனிதன் என்கிற அவ மதிப்பும் தனக்கு ஏற்பட்டு விடுமோ என்று,—ஸ்திரமாய் நின்று விட்டார். இதுதான் என்னை இன்றும், பல வருஷங்களாகியும் மனதை உருக்கப் போதியதாயிற்று. என்னை "மாப்பிள்ளையாய் அடையப் போகிருே" மென்கிற உற்சாகத்தில், வந்த நல்ல வரன்களையும் தட்டி விட்டார். அவளும் வேறொருவனும் வேண்டா மென்று சொல்லி விட்டாள்.

ஆயிற்று, வயதாய் விட்டது. ஊர் நிந்தனையைப் பொறுக்க முடியாது. கலி

யாணம் செய்து விடவேணும், என்று எப்பொழுது பிரஸ்தாபம் வந்ததோ அப்பொழுது உடனே "என் பிள்ளைக்கு அவஸரமில்லை. நீங்கள் வேறு இடத்தில் பாருங்கள்" என்று என்னைப் பெற்றவர்கள் எழுதி விட்டனர். அவர்கள் பின் வருவதை என்ன கண்டனர்? "இருட்டும் வெளிச்சமும் கலந்து வரும் ஜீவனத்தில்" என்கிற அனுபவமும் அவர்களுக்கு உண்டாகி யிருக்கவில்லை. அதுவரையில் அவர்கள் இருட்டைப் பார்த்ததே யில்லை.

காலசக்கரம் சுழன்று கொண்டே யிருக்கிறது. நான் இவ்விடத்தில் படிப்பை முடித்துக் கொண்டு மேல் நாடு சென்று படித்துவிட்டு வந்து சேர்ந்தேன். அதற்குள்ளாக எனக்கு ஒரு தங்கையும் இறந்து போயிருந்தாள். உலகத்திலும் கஷ்டமுண்டு என்பதை யறிந்திருந்தனர் தாய் தந்தையர். நானும் என் மனதிலிருக்கும் ஒரு பாசக்கட்டை, அன்புத்தளையை, ஆர்வத்தின் சிகரத்தை, அவ்வழகி யிடத்தில் ஈடுபட்டு லயித்துக் கிடந்த மனதை, அவளை யடைந்து விடுதலை பெற விரும்பினேன். ஆனால் நான் நினைத்த தொன்று; நடந்த தொன்று.

நான் திரும்பி வந்து சில மாதங்களாயின. உயர் தர உத்தியோகம் ஆகியிருந்தது. தாய் தந்தையரை என்மன விடுதலைக்காக உதறியெறிவதற்கும் தயாரா யிருந்தேன். எனக்கு வேண்டியது விடுதலை என்று என் முந்திய விடுதலையடைந்த வாழ்க்கையைச் சிந்தித்துக் கொண்டிருந்தேன், கற்பனை யுலகில் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

தந்தி! இதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து பார்த்தேன். அதில் கண்டிருந்தது, அவள் இவ்வுலகை விட்டு விடுதலை யடைந்து விட்டாளென்று. ஆகா! என் நிலைமையை எவ்வாறு விவரிப்பேன்! அவள் விடுதலை யடைந்து விட்டாள்!


இடைவிடாத முன்னேற்றம் ஓங்கி வரும் கீர்த்திக்கு ஓர் அறிகுறி!

**நியூ ஏஷியாடிக்**
**லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

இதன்—6-வது வருஷத்தில் பூர்த்தி
யான இன்ஷூரன்ஸ் புள்ளி விவரம்

**1939-ல் ரூ. 50 லக்ஷத்திற்கு மேல்**
**1938-ல் ரூ. 41·74 லக்ஷம்**

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: **பிர்லா பிரதர்ஸ் லிமிடெட்**

நீங்கள் இன்ஷூர் செய்யவோ அல்லது பிரதிநிதி
களாக யிருக்கவோ ஏற்ற சிறந்த கம்பெனி இது.

விவரங்களுக்கு எழுதவும்:

மதராஸ் பிராஞ்சு:

**ஏ. சுப்பையா** பிராஞ்சு மானேஜர்

289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.




## குழந்தைகளே ஜாக்கிரதை!

[பார்வதி, மங்களூர்]

குழந்தைகளே, உங்கள் வீட்டில், உங்களுக்கு பிறர் திருஷ்டி தோஷம் ஏற்பட்டிருக்கும் என்று அடிக்கடி திருஷ்டி கழிப்பது உண்டல்லவா? திருஷ்டி கழிப்பதில் அநேக தினுசுகள் உள. எப்பொழுதுமே திருஷ்டிபடாமல் காக்க நிலைமைக்குத் தகுந்தபடி, தங்கம், வெள்ளி, செம்பில் இரக்ஷைகளும், ஓலைச் சுருள்களும், அன்றாடம் இடும் விபூதிகளும், வியாழன், ஞாயிறு நடத்தும் சாம்பிராணிப்புகை, உப்பு, மிளகாய், சந்திமண் சுற்றல், பழைய துடைப்ப தகனம், என்றெல்லாம் குழந்தைகளுக்கு திருஷ்டி கழிக்கும் விதங்கள் அநேகம். ஒன்றுக்கும் சக்தியற்ற தாயாரானாலும் தன் குழந்தைக்குத் திருஷ்டி ஏற்படாமல் தடுக்க தன் விரல்களையாவது குழந்தை தவடையில் வழித்து தன் பொட்டுகளில் சொடுக்கி திருஷ்டி கழிப்பாள்.

குழந்தைகளுக்குத் திருஷ்டிகழிப்பதில் கைராசிக்காரர்கள் என்று சிலர் உண்டு. உங்களுக்கு அவர்களைக் கொண்டு திருஷ்டி கழிப்பார்களானால் நீங்கள் சற்று ஜாக்கிரதையாகவே இருக்க விரும்புகிறேன். இல்லாவிட்டால் எனக்கு நேர்ந்த கஷ்டம் உங்களுக்கும் நேரிடலாம்.

திருஷ்டி கழிப்பதைத் தொழிலாக உடையோர் முதலில் தாங்கள் திருஷ்டி கழிக்கப்போகும் குழந்தைகளிடம் வேறு துர்தேவதைகள் ஒன்றும் பற்றிக்கொண்டு இல்லையா, என்று பரிக்ஷை பார்த்துத்தான் பிறகு ரக்ஷைசெய்வார்கள். அப்படி பரீக்ஷியாமல் ரக்ஷை செய்தால் இவர்கள் செய்த ரக்ஷை குழந்தைகளை ஏற்கனவே பற்றியிருக்கும் துர்தேவதைக்குப் பலமாக ஆகுமே தவிர அந்தக் குழந்தைகளுக்கு நன்மை அளிக்காதாம். இதற்கு எப்படிப் பரிக்ஷை பார்ப்பார்கள் என்றால், திருஷ்டி கழிக்கப் போகும் குழந்தைகளை வரிசையாக கிழக்குமுகமாக உட்காரவைப்பார்கள். பிறகு திருஷ்டி கழிக்கப் போகிறவன் கையில் ஒரு பிரம்பை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு குழந்தையையும் அதனதன் பேரைக் கேட்பான். குழந்தைகள் பேரைச் சரியாய்ச் சொல்லிவிட்டால் அக் குழந்தைகளுக்கு ஒன்றும் தோஷமில்லை என்று அர்த்தம். அதனதன் கைகளில் பிரம்பால் தடவிவிட்டுப் போய்விடுவான்.

ஏதாவது ஒரு குழந்தையை துர்தேவதை பற்றியிருக்கும் பக்ஷத்தில் அதன் சக்தியால் அக் குழந்தையை "உன் பேரென்ன" என்று கேட்டதும் அதன் வாயிலிருந்து சொந்தப்பேர் வராமல் அதைப்பற்றியுள்ள தேவதையின் பேர் வெளிவருமாம். உடனே மந்திரவாதி கைப்பிரம்பை அக் குழந்தையின்மேல் தாராளமாய் பிரயோகிப்பான். அதன்மேல் அந்த துர் தேவதை ஓடிப் போய் விடுமாம்.

நான், தஞ்சாவூர் ஜில்லா வாசிகளான பெற்றோர்கள் வெகுநாள் தபசிருந்து பெற்றெடுத்த பெண். என் தகப்பனார் வடக்கே தெலுங்கு ஜில்லாவில் ஒரு மடத்தில் வேலை பார்த்துவந்தார். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் தெலுங்கு ஊரிலேதான்.

எனக்கு சித்தி ஒருத்தி தஞ்சாவூர் ஜில்லாவிலேயே ஒரு கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தாள். அவள் ஒரு பெரிய குடும்ப ஸ்த்ரீ. அவளுக்கு ஆணும் பெண்ணுமாக ஒரு டஜன் குழந்தைகள்.

ஒரு சமயம் என் பாட்டி எங்களைப் பார்க்க நாங்கள் இருந்த தெலுங்கு ஊருக்கு வந்தாள். அவள் திரும்பி ஊருக்குப் போகப் புறப்பட்டபோது "குட்டிக்கும் நாய்க்கும் குடிப்போக சந்தோஷம்" என்றபடி எனக்கு அவளுடன் என் சித்தி இருக்கிற ஊருக்குப் போகவேணும் என்றும் என் சித்தி குழந்தைகளோடு கொஞ்ச நாளிருக்கவேணும் என்றும் ஆசை கிளம்பிற்று. என் பாட்டியும் என்னைக் கூட அழைத்துப் போக விரும்புவதாக என் பெற்றோரிடம் உத்திரவு கேட்டாள். அவர்களுக்கு நான் அருமைக் குழந்தையானதால் முதலில் சம்மதப்படஇல்லை. பிறகு நானே தைரியமாய்ப் போகவேணும் என்று பிடிவாதம் பிடிப்பதைப் பார்த்து, "குழந்தை போய் வரட்டும்" என்று அனுப்பி வைத்தார்கள். ரயிலில் காட்சிகளை பார்த்துக்கொண்டே சந்தோஷமாய் பிரயாணம் செய்தேன். இருட்டினதும் பாட்டி தன்னிடம் வந்து படுத்துக் கொள்ளும்படி சொன்னபோது அம்மா ஞாபகம் வந்து கொஞ்சம் துக்கம் அடைந்தேன். ஆனால் அதுவும் தூக்கம் வரும் வரையில்தான். பிறகு தமிழ் ஊருக்குப் போய் சித்தி குழந்தைகளோடு சேர்ந்து ஆறு குளங்களில் குளித்து சந்தோஷமா யிருக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் பெற்றோரின் பிரிவினால் ஏற்பட்ட துக்கத்தையும் மறைத்துக்கொண்டேன்.

ரயில், கட்டை வண்டிப் பிரயாணங்கள் முடிந்து சித்தி வீடு வந்து சேர்ந்தோம். சித்திக்கும் சித்தப்பாவுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும், என்னைப் பார்த்ததில் அதிக ஆனந்தம். பெற்றோருக்கு அருமையாய் உள்ள ஒரே குழந்தையான என்னை அவர்கள் பாட்டியுடன் அனுப்பிக் கொடுத்ததற்கு ஒருபுறம் ஆச்சரியமும், ஒருபுறம் சந்தோஷமும் அடைந்தார்கள். சித்தி குழந்தைகளுக்கும், நான் தெலுங்கு ஊரிலிருந்து அவர்களைப் பார்க்க வந்திருப்பதிலும், நான் ஜோராய் பட்டுப் பாவாடைகள் சில்க் சட்டைகள் நகைகள் அணிந்திருப்பதிலும். சந்தோஷம்தான்.

என் பாட்டிக்கு என்னைப்பற்றிப் பெருமை ஒருபுறம்; "ஏதோ குழந்தையும் ஆசைப்பட்டது நாமும் கேட்டோம், அவர்களும் அனுப்பி விட்டார்கள். குழந்தையை ஜாக்கிரதையாக அதன் பெற்றோரிடம் சேர்க்கவேணுமே" என்ற கவலை ஒருபுறம். இப்படியாக என்னைப் பார்த்து ஒருவர் உன் பேத்தியா என்று பாட்டியைக் கேட்டால் அதற்கு ஒரு திருஷ்டி கழிப்பாள். இன்னொருத்தர் "உன் பெரிய பொண்ணோடே பொண் நன்னயிருக்காளே" என்றால் அதற்கு ஒரு திருஷ்டி கழிப்பாள். இப்படி தொட்டதற்கெல்லாம் திருஷ்டி கழித்தாள்.

ஒரு நாள் திருஷ்டி கழிப்பதில் கைராசி பெற்றவனான ஒருவன் என் சித்தப்பாவிடம் ஏதோ கேட்க வந்தான். என் பாட்டிக்குத் தான் திருஷ்டி கழித்து வருவது மட்டும் போதாது. அதற்கு என்று பழகிக் கை தேர்ந்தவர்களிடமும் திருஷ்டி கழிக்கவேணும் என்று எண்ணம். இதற்கு என்னை மட்டும் உட்கார்த்திக் கழித்தால் சித்தி ஏதாவது நினைத்துக்கொள்ளப் போகிறாளே என்று பயம். ஆகையால் அந்த மந்திரவாதியை உள்ளே கூப்பிட்டு, "அப்பா, வீட்டில் ஐந்தாறு குழந்தைகளாய் வளைய வருகின்றன. யார் கண் எப்படியோ? நீ தயவு செய்து எல்லாவற்றையும் உட்கார்த்தி திருஷ்டி கழித்து, விபூதி இட்டு விட்டுப்போ" என்று அவனைக் கெஞ்சி இரண்டணா தக்ஷிணையும் தலைப்பிலிருந்து அவிழ்த்துக் கொடுத்தாள்.


ஏதோ காரியம் சித்தப்பாவிடம் கேட்க வந்த அவனுக்கு இரண்டணா வரும்படி வந்ததும் உடனே சம்மதித்து எல்லாக் குழந்தைகளையும் கூப்பிட்டு, கால்களை அலம்பிவிட்டு கிழக்கு முகமாக வந்து உட்காரும்படி சொன்னான். அப்படியே நாங்களும் வந்து உட்கார்ந்தோம். அக்காள் தங்கை குழந்தைகள்தானாகையால் எனக்கும் என் சித்தி குழந்தைகள் ஒன்றிரண்டுக்கும் ஜாடையும் இருந்தது.

மந்திரவாதி வழக்கப்படி முதலில் எங்கள் ஒவ்வொருவரையும் துர்த்தேவதை

ஏதாவது பற்றியிருக்கா இல்லையா, என்று பரீக்ஷை செய்ய ஒவ்வொருவர் பேராகக் கேட்டான். சித்தி குழந்தைகள் சீதை, மீனு, வாலு, வைத்தி, ராமு, சுப்பி, என்று சொல்லி வந்தார்கள். அவனுக்கும் அவர்களை அனேகமாய்த் தெரிந்திருந்தது. என்னிடம் வந்து என்பேரைக் கேட்டான்; நான் அருமையாய்ப் பிறந்திருந்ததாலும் தெலுங்குப் பக்கத்தில் வளர்ந்ததாலும் என் பெற்றோர் என்னை அருமையாக 'பங்காரு' என்று கூப்பிட்டுவந்தார்கள். நானும் என் பேரை அவன் கேட்ட உடன் 'பங்காரு' என்றேன். இந்தப் பேரைக் கேட்டானோ இல்லையோ, மந்திரவாதி கைப் பிரம்பை ஓங்கி பளார் பளாரென்று அடித்துவிட்டான். இதுவரை அடி என்பதே அறிந்திராத நான் அலறித் துடித்து ஓலமிட ஆரம்பித்தேன். என் அழுகுரல் கேட்டு பின்கட்டிலிருந்து பாட்டியும் சித்தியும் ஓடிவந்து என்னை எடுத்தணைத்தார்கள். என் பாட்டியைக் கண்டவுடன் நான் துக்கத்தில், "என்னை இப்படி அடிக்கவா அழைத்துவந்தாய், நான் ஊருக்குப் போய்விடுகிறேன்" என்று அலறினேன். அது கேட்ட பாட்டியும் சித்தியும் மந்திரவாதியை இதெல்லாம் என்ன என்று விவரம் கேட்டார்கள். உடனே அவன் சொன்னதாவது:"அம்மா வழக்கப்படி குழந்தைகளிடம் ஒன்றும் அண்டாதிருக்கிறதா என்று பரீக்ஷை பார்க்கையில் இந்தக் குழந்தையிடம் பங்காருப் பிசாசு வெளிப்பட்டது" என்றான். அவன் என்னையும் சித்தி குழந்தைகளில் ஒருத்தியாகவே எண்ணியிருந்தான். அவர்கள் ஒருவருக்கும் பங்காரு என்று பேர்கிடையாது என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் பங்காரு என்று நான் சொன்னதும் ஏதோ பிசாசுதான் என்ற தீர்மானத்தோடு "பாருங்கள் அம்மா! நான் போட்டபோடில் அது இப்பொழுதே ஊருக்குப் போய்விடுகிறேன், ஊருக்குப் போய்விடுகிறேன் என்று அலறுகிறது" என்றும் பெருமையாகச் சொன்னான்.

என் சித்தி, பாட்டிக்கு விஷயம் ஒருவாறாக விளங்கிற்று. அதன்மேல் அவர்கள் மந்திரவாதிக்கு, நான் யார் என்றும், என் பேர் பங்காரு என்பதையும், விளக்கவைத்தார்கள்.

இப்படியாக சித்திவீட்டில் திருஷ்டி கழிக்கப்பெற்று திரும்ப ஊர்வந்து சேர்ந்தேன். ஆகையால் திருஷ்டி கழித்துக் கொள்ளும் குழந்தைகளே! ஜாக்கிரதையாக இருங்கள்.



# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம்

## பாடம் 3

[கா. சி. வேங்கடரமணி]





| | |
|---|---|
| எலி | தேள் |
| ஈ | எறும்பு |
| பல்லி | பூரான் |
| அணில் | ஓணன் |

இவை நம்முடன் சேர்ந்து வீட்டில் குடியிருந்து வரும் ஜந்துக்களில் சில. இவற்றால் நமக்கு விளையும் நன்மைகளும், தீமைகளும் என்னவென்று, மணி, நீ எனக்குச் சொல்லு.

இவைகளைப் போலொத்த இன்னும் சில ஜந்துக்களை படம் போட்டுக் குறித்து, நாளையதினம் நீ பள்ளிக்கூடம் வரும்போது எழுதிக் கொண்டு வா.

இவைகள் ஒவ்வொன்றிற்கும் என்ன ஆகாரம்? அந்த ஆகாரத்தை அவை எப்படித் தேடிப் பிடித்து அடைகின்றன?

'பூனையும், எலியும் போல்' என்று சொல்லும் வசனத்தை, மணி, நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? அந்த வாக்கியத்திற்கு என்ன அர்த்தம்?

அணிலுக்கும் எலிக்கும் ஏதாவது உறவு, ஒற்றுமை உண்டா? அணிப்பிள்ளையைப் பற்றி ஏதாவது கதை தெரிந்தால் நீ சொல்லு. சுண்டெலியைப் பற்றி நீ கதை ஏதாவது கேட்டிருக்கிறாயா?

பல்லி சொல்லுவதை நீ கேட்டிருக்கிறாயா? அதற்கு விசேஷம் ஏதாவது உண்டா? பல்லி எதைத் தின்று பிழைக்கிறது, நீ பார்த்திருக்கிறாயா?, இதைப் பற்றி உனக்குத் தெரிந்ததை ஒரு சிறிய கதையாக எழுதி நாளையதினம் கொண்டு வா.

# சாந்த சக்குபாய்

"தராசு"

கடவுளைப் பழித்து நாஸ்தீக வாதம் செய்யும் இக்காலத்தில், பக்தியின் மஹிமையை விவரித்துக் காட்டும் படங்கள் மிகவும் அவசியமானவை. விதண்டா வாதங்கள் செய்து ஜனங்கள் மனதை மயக்கும் பிரசாரங்களுக்கு எதிர் பிரசாரம் செய்ய வேண்டியது ஒவ்வொரு ஹிந்துவின் முக்ய கடமையாகும். இக் கடமையை நிறைவேற்ற, பண்டரிநாதனைப் பணிந்து, அப் பக்தியின் மஹிமையால் அவன் சேவடியை அடைந்த சக்குபாயின் புண்ய சரிதையைப் படமாக எடுத்தது பாராட்டத் தக்க விஷயமே.

"வசனம்" நன்றாக இருக்கிறது. ஆனால் யார் இலக்கணத் தமிழ் பேசுவது, யார் கொச்சைத் தமிழ் பேசுவது என்பதை எந்த சட்டத்தால் திட்டம் செய்திருக்கிறார்களென்பது தெரியவில்லை.

வசனத்தின் பாவத்தையும் அர்த்தத்தையும் உணர்ந்து சரியான முகபாவத்துடன் சக்குபாய் பேசுகிறார். ஆனால், பிறப்பு வளர்ப்பினால் "சக்குபாய்" தமிழர் அல்ல என்பதைத் தன் பேச்சினால் நன்றாய் நிரூபிக்கிறார். இக் குறையினால் தான் அவர் நடிப்பு சரியான அளவு சோபிக்கவில்லை. ஆனால், இக் குறையை நீக்கினால் "சக்குபாயின்" இயற்கைக் குணம் மறைந்து விடுமல்லவா? மாமியாரின் பேச்சு பாவனை எல்லாம் கதாகால க்ஷேப தோரணையிலேயே இருக்கின்றன. ஸாக்ஷாத் கதா காலக்ஷேப பணிபாயாகவே மாமியார் விளங்குகிறார். "சாரங்கபாணி" கொச்சைத் தமிழை அம்புகளாக உபயோகித்து சரமாரி பெய்கிறார்.

"பாட்டு" களில் அநேகம், "என்ற மெட்டிலேயே" இருக்கின்றன. அர்த்த புஷ்டி நிறைந்திருந்தும் நடை சிறிது கடினமாக இருக்கிறது. ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் சமரஸம் ஏற்படுத்தும் எண்ணத்தைப் போல், கடுந் தமிழும் வடமொழியும் கலந்து இருக்கின்றன. "உளங்கொள் காமாந்த ராவண கால ஸ்ரீராம, பாண்டுரங்கா, உரிதயிர் நெய் பால் வெண்ணெ திருடும் கோபாலா" "பாண்டுரங்க பாபஹரண பஜனை செய்வோர்க்கரும் ஸுகுண, பதமலர்சூட ஸர்வ பாப பந்தமாதி விலகி ஸர்வ மங்களமுண்டாமே" என்பவைகளை உதாரணமாகக் கொடுக்கலாம். சில இடங்களில் அன்வயமும் அர்த்தமும் ஒத்து வரவில்லை. "மதியாதே (No. 2) என்ற பாட்டில் "ஸுகமோ துக்கமோ யாவும் நில்லாதே சகடம் போலே சுழலுமதாலே" என்பதில், எதால் எது சுழலும் என்பது தெரியவில்லை. "பண்டரிநாதன் பஜனையுமொன்றே கண்டறி மோக்ஷத்தின் வழி என்றே வேண்டாம் விடு விடு வீணாசை" என்பது "பண்டரிநாதன் பஜனை ஒன்றே மோக்ஷத்தின் கண்டறி வழி என்ற வீணாசை வேண்டாம், அதை விடு விடு" என்று அர்த்தமாகிறது. "வைகுந்தா ஹரி" (8) என்ற பாட்டில் "வ்யாகூலம் தவிர் தேவா நீ எந்தன் மாநில மீதினில் வாழுயிர்க்கெல்லாம்," என்பதில் "எந்தன் வியாகூலமா" அல்லது எந்தன் மாநில மீதினிலா என்ற ஸந்தேகம் உண்டாகிறது.

சக்குபாய் ஜீவனே இல்லாமல் பாடுகிறார். மாமியார் பாடிய "ஆனந்தம் தருகிறாள்" (19) என்ற பாட்டு நன்றாக இருக்கிறது. மிகவும் நன்றாக இருந்தவை "பண்டரீபுரம் செல்வோம்" (10) "அழுவதில் பயனேது" (26) என்ற இரண்டு பாட்டுகள் தான்.

"நடிப்பில்" முதல் இடம் கமலா பாய்க்குத்தான். அதற்குப் பிறகுதான், சக்குபாய், மாமியார், சாரங்கன் முதலியோர். "ஹாஸ்யம்" மட்டரகந்தான்! ஆனால் கெட்டிக்காரத்தனத்துடன் கதையில்




மைசூர் சந்தண சோப்.

# இந்தியன் பாங்க், லிமிடெட்.

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்:—சென்னை, வடக்கு பீச் ரோட்.

**லோகல் ஆபீசுகள்:**

| | | | |
|---|---|---|---|
| எஸ்பிளனேட் | : பிராட்வே | புரசைவாக்கம் | : புரசைவாக்கம் ஹைரோட் |
| திருவல்லிக்கேணி | : பெரிய தெரு | ராயப்பேட்டை | : பஜார் ரோட் |
| மைலாப்பூர் | : வடக்கு மாடவீதி | சௌகார்பேட்டை | : சைனா பஜார் ரோட் |
| தியாகராயநகர் | : பிரகாசம் ரோட். | | |

**பிராஞ்சுகள்:**

அடோனி, ஆலப்பிழை, பெங்களூர், பெங்களூர் கண்டோன்மெண்ட், பெஜவாடா, பம்பாய், கொச்சி, கோயம்பத்தூர், கொழும்பு, ஈரோடு, குண்டூர், காரைக்குடி, கும்பகோணம், மதுரை, புதுக்கோட்டை, கொல்லம், சேலம், திருநெல்வேலி, திருப்பூர், திருவாரூர், திருச்சூர், திருச்சினாப்பள்ளி, தூத்துக்குடி கள்ளிக்கோட்டை.

சப் ஆபீசுகள்: குடிவாடா, தெனாலி, பீமாவரம், ரேபள்ளி, தனுகு, தக்கிரிலா, நரசராவ்பேட்டை, தேவக்கோட்டை, உடுமலைப்பேட்டை, மருதெரு.

லண்டன் நியூயார்க் ஏஜண்டுகள்: நேஷனல் ஸிடி பாங்க் ஆப் நியூயார்க்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 47,92,800 |
| கோரப்பட்டு, செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 12,79,280 |
| ரிஸர்வ்களும், மற்ற நிதிகளும் | ரூ. | 17,92,762 |
| ஷேர் ஹோல்டர்களின் ரிஸர்வ் பொறுப்புகள் | ரூ. | 35,13,520 |
| 31—12—39-ல் வொர்க்கிங் பண்டுகள் | ரூ. | 4,70,31,536 |

N. கோபால அய்யர், காரியதரிசி.

சேர்க்கப்பட் டிருக்கிறது. பூர்வ ஜன்மத்தில் "சாரங்கன்" குரங்காக இருந்திருக்க வேண்டும். குரங்குச் சேஷ்டைகளையும், வலிப்புகளையும் ஹாஸ்யமாகக் காட்டி "டார்வின்" சொல்லிய தத்துவத்தைப் படத்தில் நிரூபிக்கிறார். பேசாமடந்தை விஷ்ணு "ததாஸ்து" சொல்லியே இருக்க வேண்டாம். கடைசி வரை பேசா மடந்தையாகவே இருந்திருக்கலாம்.

"படப்பிடிப்பும், ஒலிப்பதிவும்" ஸாதாரணந்தான். சில இடங்களில் ஒலிப்பதிவு, ஷாட்டுகளுக்குத் தக்கபடி இல்லை. முதற் பகுதியை விடப் பிற் பகுதியில், படப்பிடிப்பு நன்றாக இருக்கிறது. ஆனால் சக்குபாயின் இடுப்பிலிருந்து கால்வரை இரண்டு மூன்று தரம் காட்டியதின் நோக்கம் தெரியவில்லை. சக்குபாயின் உயரத்தைக் குறைத்து காட்டுவதற்கா இது? "ட்ராலிஷாட்" ஒன்றில், பாதி குறி தவறி (out of focus) இருக்கிறது. தந்திர ஷாட்டுகள் நன்றாக இருக்கின்றன. "சூடு இழுக்க வேண்டும்" என்று சொல்லும் பொழுதும், இரும்பைச் சூடு பண்ணும் பொழுதும், மாமியார் முகத்தில் விழும் வெளிச்ச ஏற்பாடு (lighting arrangement) நன்றாக இருக்கிறது. ஆனால் இவைகளை சம உயரத்திலிருந்து எடுப்பதற்குப் பதிலாக தாழ்ந்த நிலையிலிருந்து படம் பிடித்திருக்க வேண்டும்.

"எடிடிங்" நன்றாக இருக்கிறது. கூடிய வரை, விறு விறுப்பை அதிகமாக்கி இருக்கிறார் எடிடர். இதற்குமேல் அதிகமாக்க வேண்டுமானால், பாட்டுகளைத்தான் வெட்ட வேண்டும். ஆனால், இது செய்யக்கூடிய காரியமா? மாய சக்குபாய் "மாமி நான்தான் சக்குபாய்" என்றதும் அதை மறுத்து நிஜ சக்குபாய் பதில் சொல்ல நாழி ஆகிறது. தந்திரப் படமெடுப்பினால் வந்த வம்பிது. எடிடர்


இந்தியாவின் பழமையான லைப் ஆபீஸ்

# பம்பாய் மியூச்சுவல்

## லைப் அஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்

ஸ்தாபிதம்: 1871. 69-வருஷங்களானது. தலைமை ஆபீஸ்: பம்பாய்.

முற்றிலும் பரஸ்பரம் சுத்த சுதேசி பங்குதாரர்கள் கிடையாது.
லாபங்கள் எல்லாம் பாலிஸிதாரர்களுக்கே சேர்ந்தவை.
வருஷாந்திர சந்தாக்களின் பேரில் 2½% தள்ளுபடி.

குறைந்த சந்தாக்கள் நிறைந்த லாபங்கள்

விபத்து சம்பந்தமான இன்ஷ்யூரன்ஸ்கள்

1939-ஆம் புது வியாபாரம்.

| | |
|---|---|
| கிடைத்த ப்ரபோஸல்களின் தொகை | ரூ. 2,58,25,000 |
| பிறப்பித்த பாலிஸிகளின் தொகை | ரூ. 2,07,15,000 |

ஒவ்வொரு வருஷமும் போனஸ் வருஷம்.

சென்னை ராஜதானி, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களில்
ஏஜண்டுகள் தேவை. கமிஷன் தாராளமானதும், பரம்பரையுமானது

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

சீப் ஏஜண்டுகள்: எஸ். ஏ. ராமசாமி அண்டு பிரதர்ஸ்,
11, லிங்கி செட்டித் தெரு, மதராஸ்.

இதைத் தன் சாமர்த்தியத்தினால் நிவர்த்தி செய்திருக்கலாம்.

"டைரக்டர்" தன் வேலையைச் சரிவரக் கவனித்திருக்கிறார். ஆனால், பாகவதர் வேஷம் போட்டுக்கொண்டு பாடாமல், டைரக்ஷனோடு நிறுத்தியிருக்கலாம். தன் பாட்டில் தானே மயங்கி சில இடங்களில் தூங்கி இருக்கிறார். இல்லாவிட்டால் "அப் ஆ, அம்மா" என்று எழுதும் சாரங்கனை ஸம்ஸ்கிருத பகவத்கீதை படிக்க வைப்பாரா? தேங்காய் எண்ணை தடவிய பிறகு, "க்ளோஸ் அப்பில்" காட்டும் சுட்ட புண்ணில் எண்ணை பட்ட கறைகூட இல்லாமல் காட்டுவாரா? நதியில், ஒரு அடி ஜலத்தில், நீந்திக் குளிக்கும் பெண்களின் முகத்திலுள்ள பொட்டு கூட அழியாமல் குளிக்கச் செய்வாரா? கையெல்லாம் சேறுக்கிக்கொண்டு, சேற்றி விருந்து பாண்டுரங்கவிக்ரஹத்தை எடுத்த சக்குபாயின் முகத்திலும் தலையிலும் கொஞ்சங்கூட சேறுபடாம லிருக்கும்படி செய்வாரா? மனிதன் நிழல் மனிதனைத் தொடரும், மைக்கின் நிழல் ஆக்டரைத் தொடரும் என்ற மூதுரையை மறந்து, மாறு வேஷத்துடன் தன் வீட்டிற்குள் நுழையும் கமலாபாயின் புருஷனைப் பின் தொடரும் மைக்கின் நிழல், சுவர் கதவு முதலியவைகள் மீது விழுவதைக் கவனிக்காம லிருப்பாரா? பாண்டுரங்கன் பாதத்தடியில் சக்குபாய் உயிர்விடுத்ததும், "ஐய்யய்யோ என் பிழைப்பில் மண் விழுந்ததே" என்று குருக்களைப் பேச வைத்து, மட்டமான, ஹாஸ்யத்தை நுழைத்து, அந்த ரஸமான இடத்தைக் கெடுப்பாரா? இல்லாவிட்டால் இவை யனைத்தும் பாண்டுரங்கன் செயலாக இருக்க வேண்டும்.

"சாரங்கன்" தன் தாயாரைக் கோபித்துக்கொண்டு, கண்ணாடியில் தோன்றும் தன் பிரதி பிம்பத்துடன் பேசுவதற்குப் பதிலாக "அம்மா!" என்ற தலைப்பின் கீழ் அவன் எழுதிய அருமைத் தாயின் படத்தினிடமே அவன் கோபித்துக்கொண்டிருக்கலாம். இயந்திரம் தானே சுழலுவதற்குப் பதிலாக பாண்டுரங்கனே மாவரைத்திருக்கலாம். பக்தியின் மகிமையை விட பக்தியின் மஹிமையால் கிடைக்கும் தண்டப் பிரயோகத்திற்கே அதிக பலம் என்று காட்டாமல், அடி கிடைப்பதற்கு முந்தியே மாய சக்குபாயைக் கொண்டு வந்து மாமியாருக்குப் புத்தி கற்பித்திருக்கலாம். சக்குபாயுடன்கூட இருந்த ஊர் ஜனங்களுக்கும், பொல்லாத மாமியாருக்குங்கூட, காக்ஷியளித்த பகவான், தன் பக்தனை கமலாபாயின் புருஷனையும், கமலாபாயையும் மறந்து வஞ்சனை செய்ய வேண்டாம்.

"ஹிந்துஸ்தானி பாட்டுகளின் மெட்டுகளில் மஹாஜனங்களுக்கு மோஹம் அதிகம் அதனால்தான் எங்கள் படங்களிலும் மெட்டுகளில் பாட்டுகள் இருக்கின்றன" என்று கூறும் சமாதானத்தைப் பொய் என்று இப்படத்தால் ரூபித்து, தமிழ்த் தொண்டு செய்தது போற்றத் தக்கதே. இதற்காக, இப்படத்தில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழர்கள் கடமைப் பட்டவர்கள் ஆகிவிட்டார்கள்.


**ஈரோடு டி. முன்சீப் கோர்ட்டு**

**1940ௗ O. P. No. 29**

ஈரோடு தாலுக்கா ஆவடையாபாளை கிராமம் கஸ்பாவிலிருக்கும் செங்கோட கவுண்டன் பெண்ஜாதி பாப்பாயி என்கிற பெரிய காளியம்மாள்—மனுதாரி.

ஷெ யூர் ரங்கசாமிக் கவுண்டன் பெண்ஜாதி பாப்பாயி என்கிற பாவாயி —எதிர்மனுதாரி.

ஷெ மனுதாரியின் மகன் மைனர் நாட்டராயசாமிக் கவுண்டன் இறந்து போய் ஷெயானுக்குப் பாத்தியப் பட்ட ஈரோடு டி. மு. கோர்ட்டு S. C. No. 1422 of 30ல் டிக்கிரி தொகையை வசூலிக்க மனுதாரி வார்சு சர்ட்டிபிகேட்டுக்கு மனுக்கொடுத்து 14-6-1940உ வாய்தா போடப்பட்டிருக்கிறது.

Erode, 20-4-40. (Sd) **U. S. Subramania Iyer,**
மனுதார் வக்கீல்.

# புத்தக விமர்சனம்

## 'கம்பன் கவிதை'

[நவயுகப் பிரசுராலயம், விலை ரூ. 1-8]

பழுத்த பண்டிதர் பலரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கம்பராமாயணக் காட்சி சித்திரங்களும் கூடிய அழகிய கம்ப சித்திரக் கொத்து. உன்னத உட்பொருளுக்குகந்த அழகிய அட்டையமைப்பு. தமிழின் மறுமலர்ச்சி இயக்கத்தில் இந் நூல் வெளியீடு ஓர் உன்னத இடம் பெறுவது நிச்சயம். கம்பன் கவிதைக் கனியைப் பண்டிதரே யன்றிப் பாமரரும் ரஸித்து ருசிக்கக்கூடிய வகையில் இதை வெளியிட்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

கம்பன் கவிதைக்குச் சூடிய இம்மாலையின் பல் வேறு மணம் கமழும் தனித்தனி மலர்களைச் சிறிது நுகர்ந்து பார்ப்போம். மகரிஷி வ. வே. சு. அய்யரின் 'கம்ப ராமாயண ரசனை' அம் மாலையின் நடு நாயகமாகிய ரோஜாமலர். இக் கட்டுரையில் வெளிநாட்டு இலக்கியப் பெரு வெற்றிகளை ஆராய்ந்து, அவைகளைக் கம்பன் கவிதைத் திறனுக்கொப்பிட்டு நோக்கிக் கடைசியில் 'கம்பனே கவிச் சக்கரவர்த்தி' யென்று முடிவுகாட்டியுள்ளார். தவிர, வால்மீகியைவிடக் கம்பன் பல இடங்களில் தன் ஒப்பற்ற தனித்திறனைக் காட்டியும், வால்மீகியிடமிருந்து வேறுபட்ட இடங்களில் தன் அரிய நாடகத் திறமையை வெளியிட்டும், ராமாயணக் கவிதையையே அதிக அழகு படுத்தி யிருப்பதையும் விரிவாக எடுத்துரைக்கிறார் ஸ்ரீ. அய்யர்.

'கம்பனைத் துய்க்கும் முறை' யென்ற வியாசம் வாசகருக்கு ஒரு அவசியமான விஷயத்தை அறிவிப்பதாகும். சாமானியரும் கம்பனை ரஸிக்கலாம்; படலம் படலமாகப் படிக்க வேண்டுமென்பதில்லை; தனித் தனிக் கவிகளையும் படித்து இன்புறலாம்; நாடகம் போன்ற கம்ப ராமாயணத்தைக் காட்சிகளாகப் பிரித்து, அவ்வப்போது பிரியமான காட்சியைப் படிப்பதன் மூலம் கம்பன் எழுப்பும் உணர்ச்சிகளைப் பெறலாம்; கடைசியில் கம்பன் கவிதையின் கட்டுக்கோப்பான ரசனையைத் துய்க்கலாம்.

'மிதிலைக் காட்சி' யில் ஸ்ரீ. ரா. பி. சேதுப் பிள்ளை யவர்கள் அடுக்கடுக்காய் வரும் அழகிய மோனை மொழியில், கண்டதும் காதலுற்று வாழ்வினைப் பயனால் ஒருவரை யொருவர் அடையும் காதற் கவிதையைக் கம்பர் 'ஓர் களவியல் நாடகமாக அமைத்தருளினர்' என்று கண்டு போற்றுகிறார்.

'கவிகளும் கும்பகருணனும்' என்ற கட்டுரையில் ஸ்ரீ. பெ. நா. அப்புஸாமி ஐயர் ஓர் அழகிய ஒப்புவமை ஆராய்ச்சியில் ஈடு பட்டுள்ளார். குழந்தையாகிய கவி காணும் கொடிய ராக்ஷஸனாகிய கும்பகருணன் முதல், பல கவிகளும் கையாண்டுள்ள பல்வகைக் கும்பகருண குண-சித்திரங்களையும் ஆராய்ந்து முடிவில் கம்பனின் கைத்திறனை விளக்கியுள்ளார். தர்மம், அதர்மம், பகைமை, அன்பு, இராக்கதக் குணம், தெய்விக இயல்பு — இக் குணக் கலப்புடன் கும்பகருணன் தோன்றுகிறான், கம்பனில். "நம்முடைய மனதைக் கவர்ந்து, நம்மை யறியாமலே நம் நன் மதிப்பைப் பெறும் இவன் கம்பரின் அற்புத சிருஷ்டிகளுள் ஒன்று."

கடைசிக் கட்டுரை 'மாயாசனகன்' என்ற கம்பனின் அதி அற்புத சிருஷ்டியைப் பற்றியது. சீதையை வசப்படுத்த ராவணன் கையாண்டதாக, 'மாயா ராமனின் வெட்டுண்ட தலைக் கதை'யை வால்மீகி வருணிக்கிறார். ஆனால் கம்பனோ, 'மாயாசனகன்' கதையை, 'கும்பகருண வதத்தின்போது இடையமைத்த கலைத் திறமையை' வெகுவாக விளக்கி யுள்ளார், ஸ்ரீ. அ. நா. மகரபூஷணம்.

இன்னும் இது போன்ற உயரிய சித்திரங்களை வாசகர்கள் தாமே படித்து இன்புற இன்றியமையாத இந் நூல் தமிழரின் ஆதரவைப் பெறுமென்பதில் ஐயமில்லை.

—சீனு. ராமஸாமி.